கோண்டாவில்

# ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் ஆலய
# மஹாகும்பாபிஷேக மலர்



துர்மதி ஷு ஆனி மீ ௨௯ உ

13-07-1981

உ

சிவமயம்



கோண்டாவில்

# ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் ஆலய

# மஹாகும்பாபிஷேக மலர்

துர்மதி ௵ ஆனி ௴ ௨௯ ௳

13-07-1981



கோண்டாவில், ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் ஆலய மூலவர்

உ
சிவமயம்

# கோண்டாவில்
# ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் ஆலய
# மஹா கும்பாபிஷேக மலர்
# வெளியீட்டுரை

''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பது சான்றோர் மொழி. கோயில்கள் நாட்டின் வளங் காட்டும் செல்வங்கள். கோயில்களில் நடைபெறும் வைபவங்களுள் தலையாயது மஹா கும்பாபிஷேகம். இதன் சிறப்பு நோக்கிப் 'பெருஞ்சாந்தி' என்று விதந்து பேசப்படுகிறது. மஹா கும்பாபிஷேககாலங்களில் தரிசித்தவர்கள், பங்குபற்றியவர்கள், திரவியதானம் செய்தவர்கள் யாவரும் பெரும் பாக்கியசாலிகளாவர்.

கோண்டாவிற் சந்தியில் கோயில் கொண்டு எழுந்தருளி அடியார்களை ஆட்கொள்ளும் ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகம் இன்று நடைபெறுவதையொட்டி வண்ணமலர் ஒன்றை வெளியிடுதல் மிகவும் பொருத்தமென்று அடியார்கள் பலரும் விரும்பினர். அதன் பேறாக, இக் கும்பாபிஷேக மலரினை எங்கள் அற்புத நர்த்தன விநாயகப் பெருமானின் திருவடித் தாமரைகளுக்குச் சமர்ப்பிக்கின்றோம்.

இம்மலருக்கு வேண்டிய சிறந்த கட்டுரைகளையும், கவிதைகளையும் ஆக்கி அளித்த அறிஞர் பெருமக்களுக்கும், அட்டைப் படத்தை அழகுறச் சித்திரித்துத்தந்த, நல்லைபிரம்மஸ்ரீ சு. ஜெகநாதசர்மா அவர்களுக்கும், புளொக்குகளை நொடிப்பொழுதில் திறம்படச் செய்துதவிய 'ஞானம்ஸ்' படப்பிடிப்பு நிலையத்தினருக்கும், மலரை அச்சிட்டுதவிய யாழ்ப்பாணம் விவேகானந்தா அச்சகத்தினருக்கும், கோண்டாவில், ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகப் பெருமான் திருவருளை முன்னிட்டு நன்றி செலுத்துகின்றோம்.

வணக்கம்

கோண்டாவில்
*13-07-81*

ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர்
கும்பாபிஷேக மலர் வெளியீட்டுக் குழு

உ
கணபதி துணை

# கோண்டாவில்
# அற்புத நர்த்தன விநாயகராலய
# புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம்
# வாழ்த்துரை

சிருட்டிதோறும் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு, இறைவன் இறைவியாகிய பராசக்தியை முகஞ் செய்யும் முதனிலையாகிய ஓம்படுநிலை ஓங்காரமூர்த்தமாம். அதுவே விநாயகமூர்த்தம், மூத்த பிள்ளை.

உயிர்களின் அறிவு, இச்சை, செயல்களனைத்தும் மூத்த பிள்ளையை முன்னிட்டனவாதல் வேண்டும். அவ்வாறுதல் கைகூடுமாயின், ஒரு நாளைக்கு ஓம்படுநிலையாகிய உயர்வற உயர்ந்த உயர்நிலை கைகூடும்.

மஹா கும்பாபிஷேகம், மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு வழிசெய்து, உயர்நிலையாகிய ஓம்படுநிலை கைகூடுதற்கு உபகாரமாய் அமைவதாக என்று பிரார்த்தித்து, வாழ்த்துவோமாக.

"கோண்டாவிற் பதியில் கோயில் கொண்டு வீற்றிருக்கும்
தாண்டவ அற்புத விநாயகர் ஆலயத்தில்
பூண்ட புனர் ஆவர்த்தன புனித அபிடேகம்
வேண்டிய வேண்டியாங் கெய்தவரம் வேண்டுவமே".

கலாசாலை வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
10-7-81

இலக்கிய கலாநிதி
பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

உ

சிவமயம்

மகாதேவ ஆச்சிரமம், கிளிநொச்சி

# ஸ்ரீலஸ்ரீ அருட்திரு வடிவேல் சுவாமிகள்

# ஆசியுரை

தனக்கு மேல் தலைவன் இல்லாத விநாயகப் பெருமானுக்கு அதிசிறந்த சிற்ப வேலைகள் அமைத்து ஆக்கப்பெற்ற ஆலயத்திற் குடமுழுக்கு நீராட்டுவது அறிந்து பரவசமடைகின்றோம்.

விநாயகப் பெருமானை வழிபாடு செய்து, எண்ணிறந்த பெரியோர்கள் பெறற்கரிய பேற்றைப் பெற்றார்கள் என்பதை இதிகாசங்கள், புராணங்கள் ஆகமங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

எனவே பெறற்கரிய மனிதப்பிறவி பெற்ற நாம் ஏனைய சீவராசிகளை விட மேலானவர்களாகப் பண்டைய காப்பியங்களிற் கௌரவிக்கப்படுகின்றோம். ஏனெனில் எமக்கு உண்மைப்பொருளை அறிய அமோக வாய்ப்புக்களை, சாதனங்களை ஆன்றோர் ஆக்கித்தந்து போந்தனர். நாமெல்லாம் வாழ்க்கையில் மாறிமாறி வரும் இன்னல்களை விலக்கிக் கொள்ளவும், பேரானந்தத்தைப் பெருக்கிக் கொள்ளவும் அவாஞ்சை உடையவர்களாக இருக்கின்றோம்.

இதற்குக் கடவுளைப் பக்தி பண்ணிப் பூசித்து வழிபாடு செய்வதைத் தவிர வேறு சாதனமில்லை. இறைவன் ஏகமாய் இருந்தாலும், பக்தர்களின் வழிபாட்டுக்கிணங்கிப் பல்வேறு அவதார மூர்த்திகளாயினர் தன் சக்தியினால்.

மேலும் கோண்டாவிற் பதியில் எழுந்தருளி ஆன்மாக்களுக்குச் சிவப்பேறளிக்கும் அற்புதநர்த்தன விநாயகப் பெருமான் ஆலயத்திற்கருகாமையில் அருளாட்சி செய்து நடமாடுங் கோயிலாகக் காட்சிகொடுத்தும், எண்ணிய இறை உண்மைகளை மக்களுக்குப் புலப்பட வைத்தும், எங்கள் யாபேரிடத்தும் தெய்வீக ஒளியைத் தூண்டி மிளிரச் செய்து கொண்டிருக்கும், ஸ்ரீலஸ்ரீ குடைச் சுவாமிகளுக்குச் சமாதிக் கோயில் எழுப்பியது யாழ்ப்பாணத்து மக்களுக்கு மட்டுமன்றி, இலங்கைவாழ் மக்களுக்கு ஓர் அற்புத நற்பேற்றைக் கொடுக்கும்.

எங்கே அருளாளர்களின் சமாதிக் கோயில்களில் ஆலயம் அமைகின்றதோ அந்த ஆலயத்தில் அருளொளி தாண்டவம் மிளிரும் என்பது யாம் புகட்டத் தேவையில்லை.

இச்சிவபுண்ணிய கைங்கரியத்தில் ஈடுபட்டு ஒத்துழைத்த கோண்டாவிற் பதிவாழ் மக்கள் அனைவர்க்கும் விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகப் பெருமான் எல்லா மங்களங்களையும் அருளப் பிரார்த்திக்கின்றோம்.

உ

சிவமயம்

முன்னாள் அரசாங்க அதிபர்

# திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்களின்

# ஆசியுரை

ஓங்கார ரூபனாய், மந்திர சொரூபனாய், கண்கண்ட தெய்வமாய், எல்லையில்லா அருளை அடியார்களுக்குப் பாலிக்கும் பெருமானாய் அற்புத நர்த்தன விநாயகர் விளங்குகின்றார். பெருமான், கோண்டாவில் கிழக்குப் பகுதிக்கு ஒரு காவல் தெய்வமாக விளங்குகின்றார். தம்மை அடைந்தார் துன்பங்களைப் போக்கி, அவர்களை வழி நடத்திக் காக்கின்றார். பெருமானுடைய அருள் மிகுந்த சந்நிதானத்திற்கு அண்மையில் வாழ்வோர், கோயில் மணியோசை கேட்டுப் பெருமானை நினைந்து வணங்குவோர், பெருமானுக்கு நாள்தோறும் தொண்டு செய்வோர், அற்புதமான பூசைகளைக் கண்டு களிப்போர் மிக்க புண்ணியசாலிகள். எம்பெருமானுடைய திருவருளைப் பெறுவார்கள் என்பது திண்ணம்.

அற்புத நர்த்தன விநாயகர் ஆலயத்தின் பூர்வீக வரலாறு மிகவும் அற்புதமானது. இப்பொழுது திருப்பணி வேலைகள் சிறந்த முறையில் நடப்பது பெரும் அதிசயமாகவே இருக்கிறது. பெருமான் சித்தப்படியே, அவர் காட்டிய வழியில் அடியார்கள் போற்றத்தக்க முறையிலே 'தொண்டாற்றுகிறார்கள்.

உலகத்தின் பல பாகங்களிலுமிருந்து, பெரு விருப்போடு திருப்பணிக்கு நிதி உதவுகிறார்கள் என்றால், பெருமான் தம் அடியார்கள் எங்கிருந்தாலும் அவர்கள் உள்ளத்திற் புகுந்து அவர்களுக்கு அருள் செய்கின்றார் என்ற உண்மை புலனாகின்றது. இப்பகுதி மக்கள் அற்புத நர்த்தன விநாயகரை மேன் மேலும் போற்றிப் பணிந்து தொண்டுகளைச் செய்து இஷ்ட சித்திகளைப் பெற்று உய்வார்களாக.

" நம்பினபேருக்கு நயந்து அளிக்கும்
அடியார் இடர்களை நீக்குமது தெய்வம்
எம்மை என்றும் நீங்காத தெய்வம்
வித்தக விநாயகன் விரைகழல் சரனே "

# விநாயகர் வழிபாடு

செந்தமிழ்மணி, பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை அவர்கள்.

" சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புத நின்ற கற்பகக் களிறே "

— ஔவையார்.

சைவசமயிகள் எக்கரும ஆரம்பத்திலும் வழிபடும் தெய்வம் விநாயகரே. வி+நாயகர் மேலான தலைவர் என்ற பொருள் தருகின்றது; தனக்குமேல் வேறொருவரும் தலைவனாக இல்லாத தனி முதற் கடவுள் என்பது இதன் பொருளாகும். சிவகணங்களுக்கெல்லாம் தலைவராக இருப்பதால் கணபதி, கணேசன் என்கின்ற பெயர்களை இப்பெருமானே பெறுகின்றார். அடியார் இடர் களைவதால் விக்கினேஸ்வரன் எனப்படுகிறார். வேண்டிய சித்திகளை எல்லாம் அருள்வதால் சித்திவிநாயகர் எனப் போற்றப்படுகிறார். எல்லோருக்கும் மூத்தவராக, என்றும் இளையவராய், பிள்ளையாய் இருப்பதால் மூத்த பிள்ளையார் என்று நாமம் பெறுகிறார். மூத்தநயினார் என்பதும் இவர்தம் திருநாமமாகும். இப்படிப் பல திருநாமங்கள் பெற்று ஓங்கார வடிவாகி அமைந்திருக்கும் பெருமான் எல்லாம் வல்ல சித்திவரதப் பெருமானாகின்றார். " அன்பர் தமக் கானநிலைப் பொருளோனே " என்று அருணகிரிநாதப் பெருமான் இப்பெருமானாரை அன்பருக்கு நிலையான உறுதிப் பொருளாக வழுத்துகின்றார்

**விநாயகர் திருவவதாரம் :**

சித்திர மண்டபம் ஒன்றில் பிரணவமாகிய ஓங்காரம், களிறும், பிடியுமாகக் காட்சி தருகின்றது. இரண்டும் ஒன்று சேர்ந்து பழைய நிலையை எய்துவதனைச் சிவம் காட்டச் சக்தி காணுகின்றது. அப்பொழுது ஓங்கார மூர்த்தியாகிய விநாயகர் திருவவதாரம் நிகழ்கின்றது. சிவசக்தியின் சிருட்டி முகமான அருள் நோக்கமே ஓங்கார மூர்த்தியின் திருவவதாரமாகும். இங்ஙனம் கந்தபுராணத்திற் கூறப்படுகின்றது. எங்கள் தனிமுதற் பெரும் சைவகுரவர் திருஞானசம்பந்த மூர்த்திநாயனார், பிரணவப் பொருளை,

" பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே "

என்று தமது திருவாக்காற் புலப்படுத்துகின்றார். மிகுந்த கொடையும், வடிவழகுமுடையவருமாகிய பெரியோர்கள் இடையறாது வாழுகின்ற வலிவலம் என்கின்ற தலத்தின்கண் இறையனார், உமாதேவி பெண்யானை வடிவமும், தாம் களிற்று வடிவமும் கொண்டு தம்முடைய திருவடிகளை உருகும் அன்போடு தொழும் அடியவர்கள் இடர்கெடுக்க இக்கணபதியைத் தந்தருளினார். ஆகவே, மிடியைப் பொடியாக்கி முத்தி கொடுப்பதற்கென்றே இப்பெருமான் கோயில்கள் தோறும் எழுந்தருளி இருப்பது யாவரும் அறிந்ததொன்றே.

### சிலேடை நயப்பாக்கள்:

இப்பெருமானைப் பல பெரியோர்கள் பலகால் வழிபட்டுப் பெரும் பயன் அருளப்பெற்றுள்ளனர். அருள் வாக்குகளைத் திருமுறைகளாக வகுத்தருளிய தமிழ் வியாசராகிய நம்பியாண்டார் நம்பிகள் திருநாரையூரில் அவதரித்து, கணபதிப் பெருமான்மேல் அருட்பாடல்களைத் தந்துள்ளார்.

"என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான் — புன்னை
விரசுமகிழ் சோலையியன் நாரையூர் முக்கண்
அரசுமகிழ் அத்திமுகத் தான்."

இப்பாடலிற் பல மரங்களின் பெயர்கள் ஒருங்கு வந்துள்ளன. புன்னையொடு கலந்த மகிழும் அரசொடு கலந்த அத்தியும் இங்கு காட்சி தருவதால், தருக்கள் விரவும் குளிர் பெருங்காவொன்று மனக்கண்ணிற் புலப்படுகின்றது. முக்கணரசு ஈண்டு பெரும் பொருளாகிய முக்கட் சிவத்தைக் குறிக்கின்றது. மகிழ் அத்திமுகத்தான் என்பது அவர் உவந்து தந்தருளிய யானைமுகப் பெருமானைக் குறிப்பிடுகின்றது. திருநாரைப் பதியிலுள்ள பிரணவப் பெருமான் தாம் அவரை நினைக்கின்ற (அவன் அருளாலே அவன்தாள் வணங்கும்) பெரும்பேற்றைத் தந்தருளி, தம் இடர்களை எல்லாம் பொடியாக்கித் தம்மை அடிமைத் திறத்தில் வைத்திருக்கின்ற முடிவிலாப் பேற்றை, இப்பாடல் மூலம் நம்பிகள், நாம் அறியச் செய்கின்றார். நம்மையுமே அப்பெருமானுக்கு அடியவராகும் விளைவை ஏற்படுத்துகின்றார்.

### வலிந்து வந்தருளுங் கணபதி திறத்தை என்னவென்பது!

இந்த அருட்பாடலை நினைக்கும்போது, கந்தபுராணச் சுருக்கம் தந்தருளிய பக்த கவிஞர் ஒருவர் தந்தருளிய பாடல் ஒன்று நினைவில் எழுகின்றது. அஃது, இஃதாகும்.

"மாவேலை யாலமதை யடக்கித் தன்னுண் மண்டுலக மண்டமெலாம் வளர்ந்து தானோர்
காவேயின் முன்னுதித்த வரசிற்றோன்றிக் கடயுனை குருந்தினுக்குத் துணையதாகித்
தூவேதந் தலைகாண்டற் கரியதாகித் துன்பமுறு பிறவியெனுந்துகள் சேர்வெய்யி
லாவேனைத் தன்னடியா நிழலிற் சேர்த்த அத்திதனைப் பத்திசெய்து முத்திசேர்வாம்."

ஆன்மாக்களின்மீது கொண்ட பெருங்கருணைத் திறத்தினாலே பரசிவப் பெருமான் எவரும் நெருங்க வெருக்கொள்ளும் நஞ்சினைத் தம்திருக்கண்டத்தடக்கி உலகத்திற்கு உய்வு காட்டும் அமிழ்தாகத் திகழ்கின்றார். அண்டங்களை எல்லாம் கடந்து நின்று அருள்செய்யும் பெருமானரே, சோலையின்கண்ணே வளரும் மூங்கில் மூலமாகக் காட்கி தந்தருளுகின்றார். கடப்ப மாலையைப் புனைந்த என்றும் இளங்குருத்தாகிய அழகு முருகனுக்கு அண்ணனும் அத்திமுகனைத் தந்தருளுகின்றார். பிறவி என்பது இடையறுக் கொடுவெயில் போன்ற தகிப்பிற்குரிய தொன்றாகும். கொடு வெயிலிற் செல்வோர் குளிர் நிழலைச் சேரத் துடிப்பர். அத்தகைய நிழல் பிரணவரூபனின் பாதமேதான். அதனைத் தொழுது பத்தி மிக்கு வெப்படங்கி நாம் முத்தி சேர்தற்கு இத்திருப்பாமடல் வழிகாட்டுகின்றது. காவேய் தந்த அரசு, கடம்புபுனை குருந்து, அடியாம் நிழலிற் சேர்க்கும் அத்தி ஆதிய மரங்கள் ஈண்டுக் காட்சி தந்து, இலேடைப் பொருள் பயந்து, செய்யுளுக்குப் பெருநயமூட்டி நம்மை மகிழச் செய்கின்றன. காவேயின் முன்னுதித்த அரசு = பூஞ்சோலையின் கண் மூங்கிலிடம் தோன்றிய தலைவராகிய சிவபெருமான், கடம்புபுனை குருந்தினுக்குத் துணைவன், கடம்பமாலையணிந்த, என்றும் முருகனுக்கு மூத்த விநாயகப் பெருமான் அடியாம் நிழலிற் சேர்த்த அத்தி = தம்பாத நிழலின்

கண் அடியவர்களைச் சேர்க்கும் யானைமுகப் பெருமான். (அரசு — தலைவன், அரசமரமு மாம்; குருந்து — என்றும் இளமையுடையது, குருந்தமரம்; அத்தி — யானைமுகப் பெரு மான்; அத்திமரம் — இப்படிச் சிலேடை அமைந்தவாற்றைக் காண்க.

**தந்தையைத் தம்பியை வழிபாடாற்ற அருள்தரும் விநாயகர்:**

முருகக் கடவுள் மீது உருகும் அன்பு கொண்ட அருணகிரிநாதப் பிரான் தம் அனுபவ ஞானமாக வெளிவந்த கந்தரனுபூதியில் அமைக்கும் விநாயகர் காப்பு செப்பருந்திறத் தது. தம்பிக்குமேல் தாம் பாடுகின்ற பாடலை அழகுறச் செய்வது அண்ணாவின் திருவருள் தான் என்று நயம்பெறப் பஞ்சக்கர ஆனையைப் போற்றுகின்றார். பஞ்சக்கர ஆனை என் பது ஈண்டு எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்தையுமே எந்தை கணபதி ஐந்து திருக்கரத்தால் அடியவருக்கு அள்ளி வழங்குகின்றார் என்னும் கருத்துத் தருவதா கப் பெரியோர் உரைகாண்பர். தம்பியின் கருமத்திற்கு அண்ணன் என்றும் துணையாக நிற்பது உலக வழக்குத்தானே!

"நெஞ்சக் கனகல் லுநெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமா லைசிறந் திடவே
பஞ்சக் கரவா னைபதம் பணிவாம்."

என்பது அந்தக் காப்பு.

சிவப்பிரகாச சுவாமிகள் கவிநயம் கைவந்த கற்பனைப் பாக்களால் தமிழுக்கு வளம் ஊட்டுகின்றார். அவர் பிரபுலிங்கலீலைக் காப்புச் செய்யுள் கவினெடு மிளிரும் குறிப்புப் பொருள் தருவதொன்று. அசுரகுலாதிபனும் சூரனுக்கு அஞ்சி சுரர்குலத் தலைவன் — இந் திரன் — பார்மிசை வந்து சீகாழியை நண்ணி, பரசிவப் பிரபுவை மலரால் வழிபாடியற்ற அழகு மிளிர் குளிர் பொழில் அமைக்கின்றான். அந்தப் பொழிலின் வேலியே சந்தனம், அகில், பலா, மா, தேக்கு, அசோகு, புன்னை, தென்னை, கமுகு, வன்னி, காஞ்சி, வேங்கை ஆகிய மரங்களால் அரணானதெனின். அதன் உட்புறச் சிறப்பு செப்பருந் தன்மை வாய்ந்தது. அவ்வருங்கா, வாடிப் பொலிவிழந்தது. அரக்கருக்கஞ்சிக் கரந்து மூங்கில் வடி வாகிச் சிவத்தை வழிபட்ட இந்திரன், சோலை வளம் பெருக விநாயகப் பெருமானை உள மார வழிபடுகின்றான். தந்தைக்கு வழிபாடியற்ற மைந்தனே இந்திரனுக்குக் கைதந்து உதவுகின்றான். சிவப்பிரகாச சுவாமிகள்,

"சுரகு லாதிபன் தூய்மலர் நந்தனம்
பெருகு வார்கடல் பெய்த வயிற்றினோன்
கரக நீரைக் கவிழ்த்த மதகரி
சரண நாளும் தலைக்கணி ஆக்குவாம்."

என்கின்றார்.

அகத்திய மகாமுனிவர் குடகுநாட்டுக் காவிரித் தீர்த்தம் கொண்டு, தண்டமிழ் நாடு வருகின்றார். கணபதிப் பெருமான் காக உருக்கொண்டு கரகநீரைக் கவிழ்க்கின்றார். அது கடல்போல் பாரிய் காவிரியாகி இந்திரன் பூந்தோட்டத்தை வாட்டம் நீக்கி அழகுடைய தாக்குகின்றது. அங்ஙனம் செய்த கணபதியின் பாதமலர் நம்சிரத்திற்கு அணியாகத் திகழுமாக என்பது பாவின் பொருள். சிறிய கமண்டலத்திலிருந்து பெரிய காவிரியாறு

பெருகியது போல், சிறிய சொற்களில் பெருங் கற்பனை நயம் மிளிர என்பாடல் தழைக்க விநாயகன் வரந்தர வேண்டுமென்று சிவப்பிரகாச சுவாமிகள் குறிப்பாக விடுக்கும் பெரு வேண்டுகோள் இப்பா!

இவ்வாறு அன்பர்கள் எல்லோரும் தங்கருமம் சித்தியாகக் கணபதியைப் பாவால் வந்தித்து தலையால் வணங்குவர். கணபதியும் பால், தெளிதேன், பாகு, பருப்பின் சுவை மிளிர, அரும்பாடல்கள் கவிஞருக்குச் சுவைவிஞ்ச அளிப்பாராகலின் அச்சுவைச் செஞ்சொல் மலர்களால் முழுமுதற் கணபதியை நாமும் மனமாரத் தொழுது உய்திபெறுவோமாக! காவிலும், குளக்கரையிலும், காட்டிலும், நடைபாதையிலும், பெருங்கோயிலிலும் அமரும் பெம்மான் அழகுதமிழொடு நம்மையும் காப்பானாக!

அற்புத நர்த்தன விநாயகக் கடவுளே போற்றி!

ஓதுசம யங்கள்பொரு ளுணரு நூல்கள்
ஒன்றோடொன் றெவ்வாம லுளபலவு மிவற்றுள்
யாதுசம யம்பொருணூல் யாதிங்கென்னில்
இதுவாகு மதுவல்ல தெனும் பிணக்க தின்றி
நீதியினு னிவையெல்லா மோரிடத்தே காண
நின்றயா தொருசமய மதுசமயம் பொருணூல்
ஆதலினு னிவையெல்லா மருமறையா கமத்தே
யடங்கியிடு மவையிரண்டு மரனடிக்கீ ழடங்கும்.

மன்னவன்றன் மகன்வேட ரிடத்தே தங்கி
வளர்ந்தவனை யறியாது மயங்கி நிற்பப்
பின்னவனு மென்மகநீ யென்றவரின் பிரித்துப்
பெருமையொடுந் தானுக்கிப் பேணு மாபோற்
றுன்னியவைம் புலவேடர் சுழலிற் பட்டுத்
துணைவனையு மறியாது துயருறுந்தொல் லுயிரை
மன்னுமருட் குருவாகி வந்தவரி னீக்கி
மலமகற்றித் தானுக்கி மலரடிக்கீழ் வைப்பன்

— சித்தியார்

உ

சிவமயம்

# கோண்டாவில் அற்புத நர்த்தன விநாயகர் ஆலயம்

"அற்புத நர்த்தன விநாயகனடி தொழ
நற்பத மெய்த்தவர் தாமடை வாரே"

பார்பூத்த பரையினளின் சீர்பூத்த செல்வன் விநாயகப் பெருமான். அவர் சைவசமயிகளின் வாழ்வோடு பின்னிப் பிணைந்து இருக்கிருர். வேத காலத்திலிருந்து, இன்றுவரை கணபதியை முன்வைத்தே எக்காரியத்தையுஞ் செய்வது சைவமக்களின் மரபாகும். இமயம் முதல் தெய்வந்துறைவரை, கங்கை தொட்டு கடாரம் ஈருக உள்ள இந்துக்களின் வணக்கத்திற்குரிய தெய்வமாக விநாயகர் விளங்குகிருர். காணுபத்தியம் ஆறுசமயங்களில் ஒன்று. கணபதியையே முழுமுதற் கடவுளாக வழிபடுவது காணுபத்திய மென்ருலும், கௌமாரம், சாக்தம், சைவம், வைணவம் முதலிய மதங்களிலும் விநாயக வணக்கம், முதலிடம் வகிக்கக் காணலாம். பிள்ளையாருக்கென்றே தனிக் கோவில் அமைத்து வழிபடுவதுடன் முருகன், சிவன், சக்தி, திருமால் கோவில் களிலும் மூலக்கருவறைக்குத் தென் மேல் பாரிசத்தில் உள் வீதியில் கணபதிக் குக் கோவில் அமைத்து, விநாயக பூஜை முதல் நடைபெறுகிறது. வைதிக மதங்களையுங் கடந்து ஜைனம், பௌத்தம் முதலிய மதங்களிலும் கணபதி யைச் சிறப்பாகவே போற்றி வழிபடுகின்றனர். இந்தியாவில் தோன்றிய மதங் கள் அனைத்திற்கும் பொதுவாய் எழுந்தருளியுள்ள தெய்வம் விக்கினேஸ்வரரே. இலங்கையில் பௌத்தர்கள் கூட திருமால், முருகன், கண்ணகி, விநாயகர் கோவில்களை அமைத்து வழிபடும் வழக்கம் தொன்று தொட்டு இருந்து வருகிறது.

விநாயகப் பெருமானை எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் வழிபட லாம். மஞ்சள், அரிசிமா, பசுவின் சாணம், புற்றுமண் என்பன வற்றிஞல் பிள்ளையாரைப் பிடித்து, அறுகம் புல்லைப்பொருத்தி விட்டால் அங்கே கணேஸ் வரன் ஓடிவந்து விடுகிருன். தேங்காயை உடைத்துப் பிள்ளையாரே நீயே கெதி யென்று தலையிலே குட்டித் தாழ்ந்து எழுந்து விட்டால் அவருடைய பூஜை பூரணமாகி விடுகிறது. இதை விடத் தும்பிக்கையே நம்பிக்கை யென்று எக்காரியத்தைத் தொடங்கினுலும் வெற்றியின் மேல் வெற்றியாகும். பட்டி தொட்டிகளிலும், புன் செய்யிலும், நன் செய்யிலும், நாட்டிலும், நகரிலும்,

ஆற்றங்கரையிலும், குளக்கரையிலும், அரசமரத்தடியிலும், ஆலமரநீழலிலும், வேழ முகத்தோன் வானமே கூரையாக எழுந்தருளியிருக்கக் காணலாம்.

பேதங்களனைத்துமாயப் பேதமிலாப் பெருமையன் இறைவன். அவனுடைய அனந்தபேதங்களில் ஒன்றுதான்விக்கினேஸ்வரர். பிரணவப்பொருளாம் பெருந்தகை ஐங்கரன் சிவனின் தோற்றமாய் விளங்குவதனுல் தன்னை வழிபடும் அடியவர்களின் துயரை நீக்கி அருள்பாலித்தற் பொருட்டு, பற்பல திருக்கோலங்களைத் தாங்கியுள்ளார். எவ்வாறு பெயர் அநந்தமோ அவ்வாறே உரு அநந்தமாயுள்ள ஈசன் மகனுகிய ஏகதந்தனுக்கு முப்பத்து இரண்டு திருவடிவங்கள் முக்கியமாகக் கூறப்படுகின்றன. அவற்றுள் ஒன்று நிருத்தகணபதி. சோடச கணபதி பதினுருகும்.

ஆன்மாக்களின்மீது, அளப்பருங்கருணை கொண்ட இறைவனும் இறைவியும், மக்கள் உய்யும் பொருட்டு, தோற்றுவித்த மூர்த்தமே விநாயக மூர்த்தமாகும். மகேஸ்வர மூர்த்தங்களில் விக்னேஸ்வர அநுக்கிரகர் என்றோர் மூர்த்தமும் உண்டு அன்றோ. அகர, உகர, மகரம் மூன்றும் ஒன்றிணைந்து ஓங்காரமாய் விளங்கும் நாதப்பிரம்மம் அறிவு, இச்சை, தொழில் என்னும் மும்மதங்களைச் சொரியும் யானைமுகப் பெருமானுய் விநாயகர் தோன்றியுள்ளார். இவ்வாறு அவதாரம் செய்த கணபதிக்கு நாமங்கள் பலவாயின. ஒரு நாமம், ஒருருவம் இல்லார்க்கு ஆயிரம் திருநாமம் பாடித் தெள்ளேணம் கொட்டினுர் மாணிக்கவாசக சுவாமிகள்.

"அங்குச பாசமேந்தி அம்பிகை தனயன் முன்னோன்
ஐங்கரன் மூத்தோன் ஒற்றையணி மருப்பினன் ஏரம்பன்
கங்கை பெற்றோன் முக்கண்ணன் கணபதி ஈசன்மைந்தன்
வெங்கயமுகனே யாகுவாகனன் விநாயகர்பேர்"

— நிகண்டு

"நம்பினோர் கெடுவதில்லை; நான்குமறைத் தீர்ப்பு" என்பது பாரதிவாக்கு. தும்பிக்கையிலே நம்பிக்கை வைத்த பேர்கள் எண்ணிய எண்ணியாங் கெய்துவர்;

"புரவலர் காணப் புறப்படும் போதும்
செருவினில் யுத்தம் செய்திடும் போதும்
வித்தியாரம்பம் விரும்பிடும் போதும்
உத்தியோகங்க ளுஞற்றிடும் போதும்
ஆங்கவன் றன்னை அர்ச்சனை புரிந்தாற்
றீங்குறுதெல்லாஞ் செயமுண்டாகும்.."

— பிள்ளையார் கதை

இவ்வண்ணம் தும்பிக்கையான் துணைகொண்டு வாழும், சைவப் பெருங்குடி மக்கள் எங்கெங்கெல்லாம் இருக்கிறார்களோ, அங்கேயெல்லாம் பிள்ளை

யாருக்குக் கோயில் சமைத்து வழிபாடு இயற்றியும் வருகிறார்கள். வழிவழி வந்த வழிபாட்டு நெறியில் நின்றும் வழுவாத ஓர் ஊர் கோண்டாவில். சைவ ஆசாரமும் ஒழுக்கமும் பக்தியும் ஒருங்கே பூத்துக் குலுங்கும் கோண்டாவிலிலே, கீழ்திசையில் யாழ்ப்பாணம் - பலாலி வீதியில், கோண்டாவிற் சந்திக்கருகாமையில், அற்புத நர்த்தன விநாயகருக்கோர் ஆலயம் அமைந்திருப்பது பெரும்பாக்கியமே. திருக்கோவில்கள் நிறைந்த திருவுடைய பதி கோண்டாவில்.

ஒருநூறு வருடங்களுக்கு முன்னர் நல்லூர்க் கந்தனின் பெருவிழாக் காலத்தில், தண்ணீர்ப் பந்தலமைத்துத் தொண்டு செய்தவர் உயர்திரு. கந்தர் கணபதியார் அவர்கள். நல்லைக் கந்தனின் திருவிழாவைக் காண நடந்து செல்லும் அடியார்களின் தாகசாந்திக்கான தண்ணீர்ப் பந்தலை நடத்த நிரந்தரமான கட்டிடமொன்று தேவையென்பதை உணர்ந்தார் அப்பெருமகன். சந்தியிலே ஒரு காணியை வாங்கி 1880-ம் ஆண்டு ஒரு மடம் அமைத்து, இரண்டாவது மகன் நன்னித்தம்பியைக் குடியிருத்தினார்; நல்லூர் உற்சவ காலங்களில் தண்ணீர்ப் பந்தல் நடாத்தவும், இரவு மடத்தில் தங்குபவர்களுக்கு உணவு அளிக்கவும் வேண்டிய ஒழுங்குகளைச் செய்யும் பொறுப்பை ஏற்ற நன்னித்தம்பி 1942-ம் ஆண்டுவரை அக்கடமையைச் செய்தார். அதன்பின் அன்னாருடைய மக்கள் முத்துத்தம்பியும், சின்னத்துரையுஞ் செய்தார்கள். நன்னித்தம்பியுடைய சேவையைத் தொடர்ந்து அவருடைய பரம்பரையிலே வந்த செல்வத்துரை இராசையா அவர்கள் அக்கடமையைச் செய்தார்கள். அவர் மறைந்தபின், கணபதியாரின் கடைசி மகன் வேலுப்பிள்ளை அவர்களுடைய இளையமகன் சரவணமுத்து அவர்களும் ஊர்மக்களும் அத்தொண்டைத் தொடர்ந்து செய்தார்கள்.

முந்நூறு ரூபாவை மூலதனமாகக் கொண்ட இத்தர்ம கைங்கரியம் நாளாவட்டத்தில் வளர்ந்து, ஆலயமொன்றை அமைக்குமளவுக்குக் காலூன்றியதும் எம்பெருமானின் கருணைபோலும். ஆடுமாடுகளுக்கான தண்ணீர்த் தொட்டியொன்றும் அமைக்கப் பட்டது. இவ்வாறு ஆரம்பமான தொண்டு கோண்டாவிற் சந்தியிலே தண்ணீர்ப் பந்தலமைக்குமளவில் வளர்ந்தது மட்டுமன்றி 1945இல் கந்தபுராணபடனம் செய்யும் பெருந்தொண்டுமாரம்பமானது. அக்காலத்தில் வேல் வைத்துப் பூசையுஞ் செய்யப்பட்டது. 1965-ம் ஆண்டில் நல்லூர்த் திருவிழா முடிந்து, பூங்காவனத்திற்கு அடுத்தநாள் பந்தலைப் பிடுங்கும்போது, அதிற் சம்பந்தப்பட்டவர்கள் எல்லோருடைய உள்ளத்திலும் ஒரு தெய்வசிந்தனை உருவாயது. விநாயகர் ஆலயமொன்று அமைக்க வேண்டுமென்ற கருத்தை நடைமுறைப் படுத்துவதில் சின்னத்துரை சுப்பிரமணியம் (இராமுப்பிள்ளை) அவர்களும், வேலுப்பிள்ளை சரவணமுத்து (ஆசைப்பிள்ளை) அவர்களும் முன்னின்றுழைத்தார்கள். இவர்கள் இருவரும் வண்ணைச் சிவன்கோவில் வடக்கு வீதியில் இருக்கும் நடராசா ஆச்சாரியிடம்

சென்று விநாயகப் பெருமானுக்கோர் சிலை வடித்துத் தரும்படி கேட்டபோது அடுத்த நாள் வரும் ஆவணிச் சதுர்த்தியில் ஒரு கல்லை வைத்துப் பூசை பண்ணும் படி அவர் ஆலோசனை சொன்னார். மனம் நிறைவு பெருமல் அவர்களிருவரும் பல ஆசாரிமார்களையும் அண்டி, விநாயகர் சிலையொன்றை உருவாக்கித் தரும் படி கேட்டார்கள். எல்லோரும் காலதாமதமாகுமென்று சொன்னதால், மனவேதனையுடன் வீடு திரும்பினர்கள். எதிர்பாராமல் ஆசிமடம் பிள்ளை யார் கோவிலுக்குச் சென்றபோது, அங்கே ஒரு விநாயகப் பெருமானின் விக் கிரகம் இருப்பதைக் கண்டார்கள். அக்கோவிலுக்கென இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட அம்மூர்த்தியைப் பிரதிட்டை பண்ண வேண்டாமென்று இறைவன் கனவிலே காட்சி கொடுத்ததற்கமைய அந்தப் பிள்ளையார் மூர்த்தம் ஆசிமடம் பிள்ளையார் கோவிலில் பூசையில்லாமலே வசந்த மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்தது. எனவே அந்த விக்கிரகத்தை ஆவணிச் சதுர்த்தியி லன்று பிரதிட்டை செய்வதற்கென ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டது. சதுர்த் திக்கு முதல்நாள் இரவோடிரவாக 9′ × 9′ அளவான சிறு கட்டிடமொன்று தகரத்தாலமைத்து, அடுத்த நாள் திங்கட்கிழமை ஆவணிச் சதுர்த்தியில் பகல் 12 மணிக்கு இயந்திரமில்லாது அம்மூர்த்தியைப் பிரதிட்டை செய்து அபிஷேகமும் நடைபெற்றது. அன்று தொடக்கம் 48 நாட்கள் அபிஷேகம் நடைபெற்றது. 49-ம் நாள் ஐப்பசி மீ முதலாந் தேதி மண்டலாபிஷேகப் பூர்த்தியும், சங்காபிஷேகமும், மாகேஸ்வர பூசையும் நடைபெற்றன. அன்று கோடைகாலத்தைப் போல் வானம் துல்லியமாய் இருந்தது: சூரிய வெப் பம் தகித்துக் கொண்டிருந்தது. முதற் சங்கெடுத்து அபிஷேகம் செய்யும் நல்ல முகூர்த்தத்தில் வானம் இருண்டு, கறுத்துக் கொட்டுமழை கொட் டியது. ஒருமணிநேர மழையின்பின் வானம் வெளுத்தது. சூரியன் உதயமா னன். எல்லாக் காரியங்களும் சிறப்பாய் நடைபெற்றன. இவ்வாறு மழை பெய்தமை அற்புதமான செயல் மட்டுமன்றி, விநாயகப் பெருமானின் அற் புதமான கருணைத் திறமுமாகும் என்ற உணர்வு ஒவ்வொருவர் உள்ளத்தி லும் உதித்தபடியால் எம்பெருமானுக்கு அற்புத நர்த்தன விநாயகரென்ற திருநாமமும் சூட்டப்பட்டது. ஏற்கெனவே மடத்திற்குத் தெற்கே விக்கிர கம் ஸ்தாபிக்கப்பட்ட இடமே இன்றைய கோவிலாகும். ஆலயம் உரு வாவதற்கு முன்னர், சுமார் 1950-ம் ஆண்டிலிருந்து காராளர் கந்தையா என்பவர் கோவிலமைந்துள்ள இடத்தின் தெய்வீகத் தன்மையைக் கண்டு பொங்கல் பூசை செய்து வந்தார்கள். அவர்களுடைய ஞானதீட் சண்யமான செயலை இங்கே குறிப்பிடாமல் இருக்கமுடியாது.

பொதுமக்களின் வணக்கத்திற்குரிய புனித பூமியாகத் திகழ்ந்த இத்திருக் கோவிலில் காலையும் மாலையும் பூசை நடைபெற்றது. பூசகராகத் திரு. இராமுப்பிள்ளை அவர்கள் தொண்டாற்றிக்கொண்டு வருகிருர்கள். ஊதி யத்தை எதிர்பாராமலவர்களாற்றும் தொண்டு அளப்பரியதாகும். 1965-ல்

மூலஸ்தானத்துக்கு முன்புறமாக 5 அடி மண்டபமொன்று அமைக்கப்பட்டது. எழுந்தருளிக்கான மண்டபமொன்றும் 1970-ல் பூர்த்தியாகி ஆவணிச் சதுர்த்தியை இறுதி விழாவாகக் கொண்டு, பத்துத் தினங்கள் அலங்கார உற்சவம் நடைபெறுவதற்கான ஒழுங்குகளைப் பொதுமக்கள் ஏற்று நடத்தினுர்கள்.

திருவெம்பாவை, விநாயகர் சதுர்த்தி, சிவராத்திரி, விநாயகர் சஷ்டி நவராத்திரி முதலிய சிறப்பு விழாக்களும், நடராஜர் அபிஷேகமும் நால்வர் குருபூசையும் வருடந்தோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. 1975-ம் ஆண்டு தொடக்கம் கோவிலுக்கான வெள்ளைக்கல்லால் ஆன இரட்டைப் பஞ்சாங்கத் திருப்பணி வேலை ஆரம்பமாகிப் பூர்த்தியாக்கப்பட்டதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பே காரணமாகும். 1979-ம் ஆண்டில் பாலஸ் தாபனம் செய்யப்பட்ட பின்னர் புதிய திருப்பணி வேலைகள் பல நிறைவேற்றப்பட்டுள்ளன. திருமஞ்சனக் கிணறு, பாகசாலை, மணிக்கூட்டுக்கோபுரங்கள் நவமாயமைக்கப்பட்டதுடன், கோவிலின் முன்புற மண்டப வேலையும், வசந்த மண்டபத் திருப்பணியும் புதிதாகச் செப்பனிடப்பட்டு இன்று பூரண பொலிவுடன்காட்சிதருவதை நாமெலாங் கண்டுகளிக்க முடிகிறது.

கோவிலின் வடபாரிசத்தில் 14-2-78ல் சமாதியடைந்த தவத்திரு. கந்தையா சுவாமிகளின் சமாதிக்கான கிரியைகள் 16-2-78 வியாழக்கிழமை பூர்த்தியாக்கப்பட்டுச் சமாதிக் கோவிலொன்றும் கட்டியெழுப்பப்பட்டது. சுவாமிகளின் கோவிலிலே காசியிலிருந்து கொண்டுவரப்பட்ட பாணலிங்கம் தாபிக்கப்பட்டு இருகாலப் பூசையும் ஒழுங்காக நடைபெற்று வருவதுடன், மாதந்தோறும் கார்த்திகை நட்சத்திரத்தில் குருபூசை விழாவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. சுவாமிகளின் சமாதி அமைக்கப்பட்ட பின்னர் கோவிலின் கீர்த்தியும், சீர்த்தியும் மேன்மேலும் ஓங்கிக்கொண்டே போகிறது. மகான்களின் சமாதியுள்ள கோவில்கள் பல பிரக்யாதியடைந்துள்ளன. அவ்வாறே கடந்த மூன்ருண்டுகளில் கோண்டாவில் சந்தியின் புனித மணம் யாழ்ப்பாணத்தின் நாலா பக்கங்களிலும் கமழ்கின்றது.

சமாதிக் கோவிலை உருப்படுத்துவதற்கும், விநாயகராலயத் திருப்பணி வேலைகளைச் செய்வித்து ஆலயத்தை உருவாக்குவதற்கும் பெரிதும் உழைத்தவர், உழைத்துக் கொண்டிருப்பவர் உயர்திரு. வே. சரவணமுத்து அவர்களேயாகும். அன்னுரின் அரிய பணியும், அர்ச்சகர் இராமுப்பிள்ளையின் தொண்டும், ஊரவர்களின் உழைப்பும், உதவியும் கோவிலின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாயின என்பதை எழுதித்தான் வைக்கவேண்டியுள்ளது.

இவ்வாறு ஒருநூற்ருண்டுகால வரலாற்றுப் பெருமைகொண்ட கோண்டாவில் அற்புத நர்த்தன விநாயகர் ஆலயம் இன்று பூரண பொலிவுடன்

திகழ்கின்றது என்றால் கோண்டாவில் சைவப் பெருங்குடி மக்கள் அள்ளிக் கொடுத்த நிதியும், அயரா உழைப்பும் தொண்டுமே கால்கோளாகும்.

எம்பெருமானுக்கு, துர்மதி வருஷம் ஆனிமாதம் 29-ம் நாள்(13-7-81) திங்கட்கிழமை பூர்வபக்ஷம் துவாதசித் திதியும் அனுஷ நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய காலை 9 மணி 10 நிமிஷம் தொடக்கம் 10 மணி 17 நிமிஷம் வரை வரும் சிங்கலக்கின சுபமுகூர்த்த வேளையில் வேதாகமகோஷ, சங்க மங்கள வாத்தியங்களுடன் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் திருவருள் துணைகொண்டு நடைபெறுகின்றது.

"வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்."

## அப்பர் சுவாமிகள் அருளிய
## தேவாரம்

நெய்யினொடு பாலிள நீராடினான் காண்
நித்தன் மணவாளனென நிற்கின்றான் காண்
கையின் மழுவாளொடு மானேந்தினான் காண்
காலனுயிர் காலாற் கழிவித்தான் காண்
செய்ய திருமேனி வெண் ணீற்றினான் காண்
செஞ்சடைமேல் வெண்மதியஞ் சேர்த்தினான் காண்
வெய்யகனல் விளையாட்டாடினான் காண்
விண்ணிழி தண் வீழிமிழலை யானே,

அரவணையான் சிந்தித் தரற்றும் மடி
அருமறையான் சென்னிக் கணியாமடி
சரவணத்தான் கைதொழுது சாரும்மடி
சார்ந்தோர்க்கட் கெல்லாஞ் சரணமடி
பரவுவார் பாவம் பறிக்கும் மடி
பதினெண் கணங்களும் பாடும்மடி
விரவுநீர்த் தென்கெடில நாடன் னடி
திரு வீரட்டானத் தெஞ் செல்வனடி;

உ
சிவமயம்

# கும்பாபிஷேக முறைகளும் விளக்கமும்

சிவாகம வித்யாபூஷணம்
— 'பிரதிஷ்டாகுரு' சிவஸ்ரீ பா. வைத்தியநாதக் குருக்கள், ஊரெழு —

அங்கிங்கெனுதபடி எங்கும் பரந்து விளங்கும் இறைவனை உருவத்திருமேனியில் தியானித்து ஆவாகித்து வழிபட வேண்டிய முறைகளை ஆகமநூல் விரிவாகவும், விளக்கமாகவும் எடுத்துக் கூறியிருக்கின்றது. அந்த உருவத்திருமேனியை வைத்து வழிபடவேண்டிய தலம் எத்தகையதாய் அமையவேண்டும் என்பதையும் ஆகமநூல் சிறப்பாகக் கூறியிருக்கின்றது. இறைவன் உருவத் திருமேனியில் நின்று அடியார்களுக்கு அருள்புரியும் தலம் ஆலயமாகும். அதனைப் பிராசாதம், தேவாயதனம் என்று பல பெயர்கள் கொண்டு அழைப்பதுண்டு. பொதுவாக ஆலயம் என்ற பெயரால் பெரும்பாலும் வழங்கப்படுகின்றது. ஆ + ஆன்மாக்கள், லயம் - ஒடுங்குதல் என்று கருத்தாகும். ஆன்மாக்கள் இறைவன் சந்நிதியை அடைந்து பக்தியுடன் ஒடுங்கும் தன்மையைப் பெறுவதால் ஆலயம் என்று பெயர் வழங்கலாயிற்று- ஆ - எங்கும் வியாபித, கும்பம், பிம்பம், தம்பம் முதலிய இடங்களில் மறைவாக அதிஷ்டித்து நின்று அருளுகின்றார் என்று இலக்கண முறையாகவும் கருத்துக் கொள்ளலாம். விதிமுறையாக ஆலயத்தை அமைத்து அவரவர் விரும்பும் உருவத் திருமேனியைத் தாபித்துக் கும்பாபிஷேகம் செய்து வழிபட்டு வருவதை நாம் காண்கின்றோம். இந்தக் கும்பாபிஷேகத்தின் நிகழ்ச்சி ஒழுங்கு முறைகளை நாம் ஊன்றிக் கவனித்தோமானல் பல அடிப்படையான தத்துவக் கருத்துக்கள் நம் வாழ்க்கையில் காணக் கூடியதாய் இருக்கும். கும்பாபிஷேகம் தொடக்கம் முதல் முடிவு வரை நிகழ்ச்சிகளை எட்டுப் பெரும் பிரிவுகளாகக் காணலாம். அவற்றுள் முதலாவது வரித்தல், அனுமதி பெறல், பிரார்த்தித்தல் என மூன்று அம்சங்கள் கொண்டது.

## 1. (அ) வரித்தல்

ஒரு கும்பாபிஷேகத்தை நடத்தத் தக்க ஆசாரியரைத் தேர்ந்தெடுத்தல்: மனுதனுடைய வாழ்க்கை தெய்வப் பண்புடையதாய் அமைய வேண்டுமானுல் முதலில் தக்க குருவைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது இன்றியமையாததாகும். அதுபோலவே இறைவனைப் பிரதிஷ்டை செய்யத் தகுதி வாய்ந்த சிவாசாரியர் ஒருவரை முதலில் தேர்ந்தெடுப்பது மிக முக்கியமாகும். ஆசாரியர் நல்லொழுக்கமும் ஆகம சாஸ்திர அறிவும் பக்தியும் நிறைந்தவராய் இருக்க வேண்டும். சிவாசாரியருடைய தவ வலிமையாலும் நித்திய நைமித்திய பூசை முறையாக நடந்து வருவதாலும் உருவத்திருமேனியை நன்கு அலங்கரித்துத் தூய்மையாக வைத்திருப்பதாலும், விக்கிரகம் தெய்வத்

தன்மையுடையதாய் விளங்குகின்றது என்று ஆகம சாஸ்திரம் கூறுகின்றது. அதில் சிவாசாரியருடைய தவ வலிமையை முன்னதாக எடுத்துக் காட்டியிருப்பதால் கும்பாபிஷேகத்திற்கு முதலாவதாக ஆசாரிய வர்ணம் செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

**2. (ஆ) அனுமதி பெறல்**

ஆசாரியர் பாலாலயம் சென்று இறைவனிடம் தருணாலயத்தில் பிரதிஷ்டை செய்ய அனுமதி தருமாறு வேண்டுதல். இதனை தேவானுஞ்ஞை என்பர். அடுத்தது ஒழுக்கமும் சீலமும் பொருந்திய வேத மந்திரம் கற்றுணர்ந்த அந்தணர்களைக் கிழக்கு முகமாக மண்டபத்தில் அமரச் செய்து அவர்களுக்கு சந்தனம் தாம்பூலம் கொடுத்து மலரால் அர்ச்சித்து அவர்களிடம் அனுமதி பெறுவதாகும். கற்றுணர்ந்த சபையோர்களே இறைவனைப் பாலாலயத்திலிருந்து தருணாலயத்திற்குக் கொண்டு சென்று பிரதிஷ்டை செய்ய இறைவனிடம் அனுமதி பெற்றோம். அக்கிரியைகளில் மந்திரங்கள் விட்டுப்போகாமலும் கிரியைகள் மாறுபடாமலும் நடத்தி தர வேண்டும். மேலும் எனக்கும் பிரதிஷ்டை செய்யக்கூடிய தகுதியையும் அருள வேண்டும் என்று ஆசாரியர் பிரார்த்திக்க அவர்களும் இறைவனிடம் பிரதிஷ்டாகர்மாவைச் செய்து முடிக்க உமக்கு ஆற்றல் உண்டாகுக என்று ஆசி கூறுவர். இதனை பிராமணானுமதி பெறல் என்பர்.

இறைவனை பிரதிஷ்டை செய்ய அந்தணர்கள் வாழ்த்து அனுமதி அவசியமா என்ற ஐயம் எழலாம். கண்ணன் கூறுகின்றான் இவ்வுலகம் இறைவன் அருளால் இயங்குகின்றது. அந்த இறைவன் எங்கும் வியாபித்திருக்கின்றான். ஆகாய வெளியிலும் கலந்து நிற்கின்றான். அவனை வழிபட்டு அவன் அருளைப் பெற உருவத் திருமேனியில் மந்திரம் கூறி ஆவாகித்துப் பிரதிஷ்டை செய்யப்படுகின்றது. ஆகவே அந்த இறைவன் மந்திரத்துக்குட்பட்டவன்; அந்த மந்திரம் அந்தணர்களால் கற்கப்பட்டு விளங்குகின்றது. மந்திரம் அந்தணர்களுக்குரியதாகின்றது. அந்த அந்தணர்கள் எனக்குப் போற்றத்தக்கவர்கள். ஏனெனில் எல்லா உயிர்களும் வழிபட்டு உய்ய உருவத்திருமேனியில் என்னை ஆவாகிக்கும் மந்திரம் அந்தணரிடம் உறைவதால் அவர்கள் எனக்கு போற்றத்தக்கவர்கள், என்று வியந்து கூறினர். தாய் தந்தையர் சேர்க்கையால் குழந்தை உண்டாகின்றது. அக்குழந்தை வளர்ந்து மனிதனாகின்றான். அவன் குருவினிடம் சென்று மந்திரத்தைக் கற்றுக்கொள்ளுகின்றான் என்ற நியதி அளவில் மட்டிலும் அவன் அந்தணனாகமாட்டான். தாய் தந்தையர் சேர்க்கையால் உதயமாகின்ற மைந்தனுக்குத் தூய்மை உண்டுபண்ணக் கூடிய சில கிரியை முறைகள் விதிக்கப்பட்டுள்ளன. குழந்தை பிறந்த உடன் தங்கத்தை உரைத்துத் தேனில் கலந்து எல்லாத் தெய்வங்களும் உனக்கு நல்லறிவைக் கொடுக்கட்டும் என்று மந்திர வாழ்த்துக் கூறித் தந்தை மைந்தனின் நாவில் தடவுகின்றார். பின் மூன்று வேதங்களின் சாரமான பிரணவத்தைக் கூறித் தயிரையும் மைந்தனின் நாவில் தடவுகின்றார்.

வேத மந்திரம் கற்கத் தகுதியுள்ளவனுவாய் என்று வாழ்த்துக் கூறுகின்றார். மேலும் இது போன்ற சில கிரியைகளால் அக் குழந்தை தந்தையின் இந்திரியத்தால் வரும் தோஷமும், தாயின் கற்பவாசத்திலுள்ள தோஷமும் நீக்கப் பெற்றுப்பரிசுத்தமாகவிளங்குகின்றது. பின் ஏழாம் வயதில் வேதசாரமான காயத்திரியை தந்தை மகனுக்கு உபதேசிக்கின்றார். அவன் முறையாக ஜபித்து வருகின்றான். இதனால் அவன் உள்ளம் தூய்மை அடைகின்றது. பின் குருவை அடைந்து வேதத்தை முறையாகக் கற்கின்றான். தாயின் கற்பவாசத்திலிருந்தே தூய்மை பெற்று வளர்ந்து வருகின்ற பாலகன் வேதத்தைக் கற்பதால் அந்த வேதம் சித்தியுடையதாக ஆகின்றது. ஆகவே அந்தணர் அனுமதி என்பது அவர்கள் உள்ளத்திலிருந்து வருகின்ற வாழ்த்து. அது வேத புருஷனின் வாழ்த்து அனுமதியாகும். ஆகவேதான் இரண்டாவதாகப் பிராமணனுநுஞ்ஞை கூறப்பட்டுள்ளது.

3. (இ) பிரார்த்தித்தல்

எந்த ஒரு காரியத்தையும் இடையூறு இல்லாமல் நிறைவேற்ற விநாயகப்பெருமான் திருவருள் வேண்டும். காற்று, மழை, நெருப்பு முதலிய உற்பாதங்கள் நிகழாது மங்களகரமாகக் கிரியைகள் நிறைவேற நவக்கிரகங்களின் அருள் வேண்டும். ஆகவே கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம் இவ்விரண்டையும் சிவாச்சாரியர் செய்து முடிக்கின்றார். இது பிரார்த்தனையாகும்.

II சுத்திகரித்தல்

எந்த ஒரு காரியத்தையும் செய்து முடிக்கப் பொருள் இன்றியமையாதது. அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்ற முதுமொழியை யாவரும் அறிவர். சிவதர்மம் செய்து முடிக்கப் பொருள் மிக முக்கியமானது. அந்தப் பொருள் தூய்மையுடையதாய் இருக்க வேண்டும். அதாவது நேர்மை வழியில் அப்பொருள் ஈட்டியதாய் அமைய வேண்டும். சிவதர்மத்திற்காக ஈட்டிய பொருள் பல வழியாக வந்திருக்கக் கூடும். ஆகவே அப்பொருளைச் சுத்திகரித்தல் என்ற கிரியையைக் குரு நடாத்துகின்றார். சிவாஸ்திர - மந்திர ஜெபம் ஹோமம் முதலியவற்றைச் செய்து கும்ப நீரால் தெளித்துச் சுத்தமாக்கிப் பதினொரு பாகமாகப் பிரித்து எஜமானிடம் கொடுத்துச் சிவதர்மத்தைச் செய்து முடிக்குமாறு ஆசாரியார் தெரிவிக்கின்றார். பொருளைச் சுத்திகரித்தபின் குரு தன்னையும் இறைவன் உறைவிடமான ஆலயத்தையும் சுத்திகரிக்கின்றார். மதுபாகம் என்னும் கிரியையைச் செய்து ஆன்ம சுத்தியைப் பெறுகின்றார். நெய், தேன், பழம் இவைகளில் ஆன்மதத்துவம், வித்தியா தத்துவம் சிவதத்துவம் என்ற மூன்று தத்துவங்களையும் பூசித்து மதுபாகத்தை அருந்துகின்றார். அறிந்தோ அறியாமலோ முற்பிறவியிலே சிவ நிந்தை, சிவசாஸ்திர நிந்தை சிவனடியார் நிந்தை இவைகளைச் செய்திருந்தாலும் அத்தோஷம் நீக்கப் பெற்றுக் குரு ஆன்மா சுத்தியுடையவராய் விளங்குகின்றார். பின் பத்து வகையாக நீராடிப் புறச்சுத்தியைச் செய்து

கொள்ளுகின்றார். அதனால் உடல் ஆரோக்கியம், பல வகையான பாபங்கள் நீங்குதல், மனதில் ஒருமைப்பாடு திரிகரணசுத்தி இவைகளைப் பெறுகின்றார். நல்லறங்களைச் செய்யத் தொடங்கும் பொழுது தீயவர் தீய சக்திகளை உபயோகித்து இடையூற்றை விளைவிப்பர். பின் கிராம சாந்தி என்ற கிரியை நடத்துகின்றார். ஆலயம் மட்டும் சுத்தமானால் போதாது. அக் கிராமத்தில் வசிப்பவர்களும், நோய் பிணியற்றவர்களாய் – அகால மரணமற்றவர்களாய் வறுமையற்றவர்களாய் – தீமையற்றவர்களாய் விளங்க வேண்டும். அப்பொழுதுதான் ஆலயம் சிறப்புடையதாகும். அடியவர்கள் வந்து தரிசிப்பதனால்தான் ஆலயம் தெய்வ சாந்நித்தியம் உடையதாய் விளங்கும். ஆகவே கிராம நன்மைக்காகச் செய்யப்படும் சாந்தியாதலால் கிராமசாந்தி என்று பெயர் வழங்கப்பட்டது. அதனைச் செய்து அதன்பின் பிரமா, இந்திரன், அக்கினி முதலிய எண்திசைப் பாலகர்கள் அவ்விடத்தில் வந்து வசிக்கக் கூடியதாகப் பூமியைச் சுத்திகரிக்கிறார்கள். ஆலயத்தின் வெளிவீதியில் எண் திசைகளில் நின்று அமைதி நிலையைக் குலைக்கும் யக்கர், அரக்கர், பூதங்கள், பிசாசுகள், பிரம்மராக்ஷசர், மகாகாளி, சரளீ, வடுகர் ஆகிய எண்மருக்கும் பலி, உணவு கொடுத்து மரியாதை செய்து "நீங்கள் இவ்விடத்தை விட்டு நீங்கி, மலை அடிவாரம், காடு, ஆற்றங்கரை, பாலைவனம், மயானம் முதலிய இடங்களிற்சென்றுவசியுங்கள். இங்கே இறைவனுடைய பிரதிஷ்டை நடைபெறப் போகின்றது" என்று கூறி, பிரவேச பலி என்ற கிரியைகளைக்குரு செய்கின்றார். நல்லறங்களைச் செய்யத் தொடங்கும் பொழுது தீயவர் தீய சக்திகளை உபயோகித்து இடையூற்றை விளைவிப்பர். அத்திய சக்திகளை நீக்க ரட்சோக்ந சாந்தியைக் குரு செய்கின்றார். "நான்கு திசைகளில்இருந்துவரும் தீய சக்திகளை அழிக்கும் ஆற்றல் மிக்க தேவர்களே! உங்களுக்கு வணக்கம். எம்மைக் காத்தருள் புரிவீர்களாக" என்று பிரார்த்தனை அமைந்துள்ளது திசாஹோமம்.

வாஸ்து சாந்தி – பூமியானது. அசத்தாக ஜடசம்பந்தம் உள்ளதினால் அதை நீக்கிச் சத்பாவம் உண்டாவதற்குச் செய்வது, அசுத்தச் சொரூபமான பூமியை பாலாக்கினியால் தகித்துப் பின் பூமிக்கு அதிபதியான பிரமாவின்மூச்சுக்காற்றினால்சோதிரூபமாகிச் சுத்தம் செய்வதாம். நீற்றுப் பூசினிக்காயை பூமியின் வடிவமாகத் தியானித்து அதன் விதைகளை அண்டங்களாக நினைத்து எல்லாவற்றையும் ஹோமம் செய்து பின் பூமிக்கு அதிபதியான பிரமாவின் கட்டளையினாற் பரிசுத்தமானதாகப் பாவித்தல் வாஸ்து சாந்தியாகும். இச் சாந்தி கும்பாபிஷேகம், பாலஸ்தாபனம், யாக மண்டப கல்பனம், கோபுரம், தடாகம், வீடு, உற்சவம் போன்ற இடங்களில் அவசியம் செய்ய வேண்டும்.

**வாஸ்துவின் வரலாறு:**

முன்னொரு சமயம் அந்தகன் என்ற அசுரனுடன் இறைவன் போர் செய்யும் போது அவரது மேனியிலிருந்து வேர்வைத் துளி நிலத்தில் விழுந்தது. அத்துளி உலகம் முழுவதையும் தன்

னுள் விழுங்கும் வலிமை பொருந்திய பூதமாகத் தோன்றியது. இறைவன் கட்டளையால் அந்தப் பூதம், அந்தகாசுரன் இரத்தத்தைப் பருகியது. பின் சிவபெருமான், மகிழ்ச்சியுற்று, அப்பூதம் விரும்பிய வரங்களைக் கொடுத்தார். வரங்களைப் பெற்று பூதம் மூவுலகத்தையும் கொடுமைப்படுத்தியது. தேவர்கள் இறைவனிடம் தஞ்சம் புகுந்தனர். சிவபெருமான் உருத்திரனையும் பாசங்களையும் படைத்தருளினார். சிவபெருமான் பூதத்தின் வலிமையை ஒடுக்குமாறு கட்டளையிட்டார். உருத்திரனும் பாசங்களால் அப்பூதத்தைக் கட்டி நிலத்தில் வீழ்த்தி பிரமாதி தேவர்களை வாழச் செய்தார். இந்த வாஸ்து சாந்தியை சிவாசாரியர் செய்து ஆலயத்தைச் சுற்றிலும் தேவர்கள் வந்திருந்து இறைவன் பிரதிஷ்டையில் கலந்து கொள்ளும்படி செய்வதாக அமைகிறது.

## II விக்கிரகப் பிரதிஷ்டை

உருவத்திருமேனி புதிதாகத் தாபிக்கப்படுவதாயின் குரு சிற்பியைக் கொண்டு (நயனோன்மீலநம்) கண் திறத்தல் என்ற 'கிரியையைச் செய்விக்கிறார். உருவத் திருமேனியைச் சுற்றித் திரையிட்டு சிற்பி குருவின் கையிலிருந்த ஆயுதத்தைப் பெற்று முதலில் நெற்றிக் கண்ணையும், அடுத்தது சூரிய நேத்திரத்தையும்அதன்பின்சந்திரநேத்திரத்தையும் இறைவனைத்தியானித்துக் கொண்டு ஆயுதத்தால் திறக்கின்றார். வாய், மூக்கு, காது, கொப்பூழ், நகக்கண் முதலிய ஒன்பது இடங்களில் சிறு துவாரத்தை உண்டுபண்ணுகிறார். பின் குரு பிம்பசுத்தி முடித்து பால், நெய், தேன், நெல், கண்ணாடி, யானை, அந்தணர் கன்னிப்பெண், தீபம் பசு, எஜமானன், பஞ்சாராத்திரிகம் இவைகளை இறைவனுக்கு முன்வைத்துத் தரிசிக்கச் செய்கின்றார். அதனால் பசுச் செல்வம், தானிய வளர்ச்சி, இன்ப வாழ்வு, வீரியம், மனோபலம், வேதநெறி, கற்பு, அறிவுச்சுடர், சிவதர்மம், ஐந்தொழில் இவை யாவும் நாட்டில் சிறப்பாக விளங்கும் என்பதாகும். பின் உருவத் திருமேனியைத் தண்ணீரில் மார்பு அளவில் வைத்து, சக்தி வடிவமாக இருந்தால் காது அளவு வரை தண்ணீரில் வைத்து விசேஷ பூஜை, அபிஷேகம் இவைகளை ஆசாரியர் செய்கின்றார். இதனை ஜலாதி வாசம் என்பர். பின் தண்ணீரிலிருந்து எடுத்துத் தானியாதி வாசம் என்ற கிரியையை ஆசாரியர் செய்கின்றார். சுத்தமான தானியத்தை எடுத்துப் புண்ணியாக நீரால் தெளித்து முற்கூறிய அளவில் அத்தானியத்தால் மூடி எண்மலரால் அர்ச்சித்து ஒரு முகூர்த்த காலம் அவ்வாறு வைத்திருந்து பின் பிம்பத்தை எடுத்து ஒரு பீடத்தில் வைத்து அடியார்களைக் கொண்டு வீதிவலம் செய்விக்கின்றார். கோபுர வாயிலை அடைந்ததும் ஆசாரியர் (திருஷ்டி தோஷ நிவிர்த்தி) கண்ணூறு நீங்குதல் என்ற கிரியையைச் செய்கின்றார்.

பின் மாலையில் சயனாரோபணம் என்ற கிரியையையும் செய்து முடிக்கிறார். சுத்தமான விரிப்பில் தலையணை முதலிய உபகரணங்களுடன் உருவத் திருமேனியைப் படுக்கவைத்து 'விசேஷ பூசை, நியாஸம் முதலியவற்றைச் செய்கின்றார். இதனால் சயனாரோகணம்

என்று கூறுவர். கண்திறத்தல், நீரில் வைத்தல், நெற்குவியலில் வைத்தல், வீதிவலம், படுக்கையில் விடுதல் இவ் வைந்து காரியங்களையும் ஆசாரியர் செய்து முடிக்கிறார். விவேச பூதாநி, சராசராணி என்பது வேதமந்திரம். சரப்பொருள், அசரப்பொருள் எல்லா வற்றிலும் இறைவன் மறைந்து நிற் கின்றார் என்பது கருத்து. அந்த இறை வன் ஒளியாகவும், உணவாகவும் நீராக வும், காற்றாகவும் இருந்து உயிர்களைக் காத்து வருகின்றான் என்றும் போற் றப்படுகின்றான். அருவமாகப் பஞ்ச பூதங்களில் பரவி நிற்கும் இறைவனை உருவத்திருமேனியில் வந்து இணைந்து அருள்புரியுமாறு இவ்வைந்து கிரியை கள் செய்யப்படுகின்றன. கண் திறத் தல் என்பதால் ஒளியிலிருந்தும், நீரில் வைத்தல் என்பதால், ஜலத்திலிருந்தும் நெற்குவியலில் வைத்தலால் நிலத்தி லிருந்தும், வீதிவலம் வருதலால் ஆகா யத்திலிருந்தும், படுக்கையில் கிடத்த லால் காற்றிலிருந்தும் இறைவனு டைய சக்தி, உருவத்தில் இணைந்து கொள்கின்றது. ஆகவே புதிய உருவத் திருமேனிக்கு இவ்வைந்து கிரியைகளை யும் ஆசாரியர் செய்து முடிக்கின்றார். பின் சுபவேளையில் யந்திரஸ்தாபனம் செய்து பீடத்திற்கும் உருவத்திருமே னிக்கும் இணைப்பை உண்டுபண்ணுகி றார். எந்த ஆலயத்தில் பீடபந்தம் இல்லாது மூர்த்திகாணப்படுகின்றதோ அங்கு செய்யப்படும் பூசை முதலி யவை யாவும் பயனற்றவையாகும் என்று ஆகம நூல் கூறுகிறது. அடுத்து பிம்பசுத்தி என்ற கிரியை நிகழும்.

தர்ப்பை, அடிமண், புற்றுமண், நாவலடிமண், ஆலடிமண், வில்வ மரத் தடிமண், துளசி அடிமண் இவைகளை ஒரு மண் கலத்திலிட்டு நீர் நிறைத்து அதுபோல அரசு, ஆல், அத்தி, வில்வம், நாவல், மா இவைகளின் தளிரை ஒரு கலசத்திலும், பட்டைகளை மற்றொரு கலசத்திலும் வைத்து நீர் நிறைத்து ஆத்ம தத்துவம், வித்தியாதத்துவம், சிவதத்துவம் என்ற தத்துவத்திரயத் தைப் பூசித்து அக்கலச நீரால் பிம் பத்தை அபிஷேகம் செய்தால் பிம்ப சுத்தியாகும். பிம்பசுத்தி முறையாகச் செய்யப்படாவிடில் தெய்வ சாந்நித்தி யம் உண்டாகாது.

## IV மிருத்சங்கிரகணம்

பாலிகை தெளிப்பதற்காகப் புண் ணிய பூமிக்குச் சென்று மண் எடுத்து வருதல் என்பதையும், அங்குரார்ப் பணம் பாலிகை தெளித்தல் என்பதை யும் (இவ்விரண்டு கிரியைகளையும்) குரு செய்கின்றார். இவ்விரண்டும் படைப்பு என்ற தத்துவத்தைக் குறிக்கிறது. ஆகவேதான் பூமிதேவியைப் பூசித்து வழிபட்டுப் பிரார்த்தனை முடித்துப் பூமி தேவியின் வயிற்றிலிருந்து மண் எடுக் கப் படுகின்றது. படைப்புக்குரிய இடம் வயிறாகும். அது போலவே பாலிகை தெளித்து அங்குரம் நன்கு வளருவ தால் நாட்டில் தானிய வளர்ச்சியுண் டாகிப் படைப்புக்கள் வளர்ச்சி பெறும். பின் ஆசாரியர் ரக்ஷாபந்த னம் (காப்புக்கட்டுதல்) செய்கின்றார்.

பின் ஆசாரியர் பாலாலயம் சென்று இறைவனுக்கு பிரசன்னாபிஷே கம் செய்கிறார். அதன் கருத்து பாலா

லயத்திலிருந்து யாகசாலைக்கழைத்துச் செல்லக் கருதியுள்ளோம். இறைவன் எங்கள் அழைப்பை ஏற்றுச் சகலகலா மூர்த்திகளுடனும் யாகசாலைக்கு எழுந்தருள ஆயத்தமாகின்றார் என்பதாம். பின் கடஸ்தாபனம் என்ற கிரியை நிகழ்கின்றது.

குடத்தை மாவிலை, தேங்காய், கூர்ச்சம், வஸ்திரம், மாலை இவைகளால் வேத மந்திர பாராயணத்துடன் நன்கு அலங்கரித்துப் பாலாலயம் சென்று இறைவனுக்கு முன் கலசத்தை வைத்துப் (கலாகர்ஷணம்) பிம்பத்திலிருந்து கலசத்தில் வந்து சகல கலைகளுடன் அமரும்படி பிரார்த்தித்துப் பூசித்து, யாத்திரா ஹோமம் முடித்து வேதபாராயணத்துடனும் சகல வாத்திய கோஷங்களுடனும் வலமாக யாகசாலை சென்று கலசங்களைத் தானிய பீடத்தில் சிவாசாரியர் ஸ்தாபிக்கின்றார். உருவத்திருமேனியிலிருந்த இறைவனை அருவுருவத் திருமேனியாய் அமைந்த கலசத்தில் ஆகர்ஷித்து விசேஷபூசை, ஹோமம், ஜபம் முதலியவற்றைச் செய்து வழிபட யாகசாலைக்கு அழைத்துச்சென்றதாகக் கருத்தாகும். அருவத்திருமேனி என்று குறிப்பிட்டது இறைவனை நிஷ்களமாக ஆகர்ஷித்துச் சகளமாகப் பூசிக்க வேண்டும் என்ற ஆகம வாக்கியத்திற்குப் பொருத்தமாம். நிஷ்கள ரூபத்தில் சாந்தி, அதீத கலை, சிரசாகவும்; சாந்திகலை முகமாகவும்; வித்தியாகலை மார்பாகவும்; பிரதிஷ்டாகலை குஹ்யமாகவும்; நிவிர்த்தி கலை முழங்கால், பாதமாகவும்; புவனத்துவக ரோமங்களாகவும், வர்ணத்துவா தோலாகவும், மந்திராத்வா இரத்தமாகவும், பாதாத்துவா தசையாகவும், தத்துவாத்துவா எலும்பு, இந்திரியங்களாகவும் நினைக்கப்பட வேண்டுமென்று ஆகம சாஸ்திரம் கூறுகின்றது.

## V யாகசாலையில்

கும்பம் ஸ்தாபித்தபின் விதி முறைப்படி குண்டத்தில் ஆசாரியர் அக்கினியை உற்பத்தி செய்கின்றார். மறுநாட்காலை தொடங்கி காலை-மாலை இரு நேரங்களிலும் பூஜை, ஹோமம் இவைகளைச் செய்து வருகின்றார். பூஜை, ஹோமம், ஜபம், பாராயணம் முதலியவற்றால் திருவருள் நிறைவு உண்டாகிறது. அக்கினியில் செய்யப்படும் ஹோமத்தால் இறைவன் பூரண திருப்தியடைகின்றார். அக்கினிமுகா தேவா என்று வேதவாக்கியம் உள்ளது. இறைவன் அக்கினியை முகமாக உடையவர் என்ற கருத்து. 'உருவேறத்திருவேறும்' என்ற சான்றோர் வாக்கின்படி எவ்வளவு ஹோம எண் கூடுகின்றதோ அவ்வளவு அருள் நிறைவும் உண்டாகிறது.

### ஸ்பர்சாகுதி

யாகசாலையில் வழிபடும் அருவுருவத்திருமேனிக்கும், தருணாலயத்தில் வீற்றிருக்கும் உருவத் திருமேனிக்கும் முப்புரி நூலால் அல்லது தர்ப்பைக்கயிற்றால் தொடர்புபடுத்திச் சிவாக்கினியால் ஆகுதி செய்து சுருக் சுருவத்துடன் முப்புரி நூலைத் தொடர்பு கொண்டு தருணாலயம் சென்று உருவத் திருமேனியை பிரம்ம பாகம், விஷ்ணு பாகம், உருத்திர பாகம் என்று மூன்றாகப் பிரித்து பூசித்து சுருக் சுருவத்தில் எஞ்சியிருக்கும் நெய்யை அந்தந்தப் பாகத்தில் ஹோமம் செய்கின்றார். இவ்

வாறு மூன்று முறை நடைபெறுகின்றது. அக்கினிக்குக் குணம், உருவம், பரஞ்சோதியாகிய பேரொளி அருவம், அது உருவத் திருமேனியில் மறைந்திருக்கிறது. ஒரு சமயம் மால், அயனுக்கு அந்தப் பரஞ்சோதி உருவமாகக் காட்சியளித்தது. பின் அந்தச் சோதி குளிர்ந்து மலையாக மாறியது என்பதைப் புராணங்கள் மூலம் நாம் அறிவோம். அந்த மலையில் இருந்து எடுத்து உருவாக்கப்பட்டதே உருவத்திருமேனியாகும். உருவமான சிவாக்கினியில் ஹோமம் செய்து யாகசாலையில் நிகழ்த்திய ஹோமத்தின் பலன்கள் யாவும் இந்த இந்த உருவத்திருமேனியில் நின்று அருள் புரியட்டும் என்பது கருத்தாகும். இவ்வாறு ஹோமம், ஜபம், பூசை முதலியவற்ருல் யாகசாலையில் வேதிகையில் வைக்கப்பட்ட கலசநீர் அருளமுதமாய் மாறுகிறது.

## VI கும்பாபிஷேகம்

விசேஷ பூரணுகுதி முடித்துத் தீபாராதனை செய்து யாத்திராதானம் முடித்துக் கும்பம் தூக்கி அடியார்கள் புடைசூழ மேள வாத்தியங்களுடன் திருவாலயம் சென்று சுபமுகூர்த்தத்தில் கலசத்தின் அருளமுதை உருவத் திருமேனியில் சிவாசாரியர் அபிஷேகம் செய்கின்ருர். தொடக்கம் முதல் பல கிரியைகள் நிகழ்ந்துள்ளன. இன்னும் இரண்டு கிரியைகள் உள்ளன. இவ்வாறு இருந்தும் பிரதிஷ்டை என்று பெயரிட்டு அழையாமல் மகா கும்பாபிஷேகம் என்று பிரசித்தமாக விளங்குவதன் காரணம் யாது?

படிகநிறம் வாய்ந்த சிவலிங்கம் பாதாளத்திலிருந்து வானளாவிப் புவனம் முழுவதும் வியாபித்து நிற்கின்றது. கூடிக் குறையாத பூரண சந்திரன் சிவலிங்கத்தின் சிரசில் விளங்குகின்றது. அதிலிருந்து அமுதநீர் பெருகிக் கொண்டே இருக்கின்றது. அக்காட்சியை உள்ளத்தால் சிவாசாரியர் தியானித்துக் கொண்டு நமச்சிவாய என்ற ஐந்தெழுத்தை நடுமணியாகக் கொண்டு விளங்கும் ஸ்ரீ ருத்திரத்தை ஜபித்துக்கொண்டு அபிஷேகம் செய்ய வேண்டும் என்ற விதி முறையைப் பின்பற்றி இயற்கையாகவே இறைவன் முடியிலிருந்து இடைவிடாது அருளமுதம் பொலியப் பூசை ஹோமங்களால் அருளமுதமாக மாறிய கலச நீரை அத்துடன் சேர்த்து அபிஷேகம் செய்வதாக அமைந்தபடியால் மகா கும்பாபிஷேகம் என்ற பெயரிட்டு அழைக்கப்படலாயிற்று. மகா—போற்றத்தக்க, கும்பாபிஷேகம் - கலச நீரால் அபிஷேகம் செய்தல் என்ற கருத்தாகும்.

## VII மகாபிஷேகம்

கும்பாபிஷேகம் முடிந்த பின் பால் தயிர், இளநீர் முதலிய விசேஷ திரவியங்களால் இறைவனுக்கு அபிஷேகம் செய்தல் மகாபிஷேகமாகும். அதனுல் இறைவன் உள்ளம் மகிழ்வு பெற்றுப் பரிபூரண அருளைச்செய்கின்ருர். இறைவன், அக்கினியை முகமாக உடையவர் என்று முன் கூறப்பட்டது. அந்த அக்கினிக்கு ஏழு நாக்குகள் உள்ளன. சிவாக்கினியில் பால், தயிர், பழவகை முதலியவை விசேஷமாகக் ஹோமம்

செய்யப்பட்டுள்ளன. அதனுல் இறைவன் கலசத்தில் அருள் பாலிப்பவராய் விளங்குகிறுர். பின் கும்பாபிஷேகம் முடிந்தது.

உருவத்திருமேனியில் மறைந்திருப்பது பரஞ்சோதி. அந்த அக்கினிக்கு ஆயிரம் நாக்குகள் உள்ளன. ஆகவே ஏராளமாகப் பால், தயிர், இளநீர், பஞ்சாமிர்தம் முதலியவற்ருல் அபிஷேகம் செய்து ஆசாரியர் திருவருள் நிறைவை உண்டுபண்ணுகிறுர். இறைவன், தக்ஷிணமூர்த்தியாய் இருந்து ஸநகாதி முனிவர்களுக்கு ஞானத்தை உபதேசிக்கின்ருர் என்று சாஸ்திரம் கூறுகின்றது. முனிவர்களுக்கு உபதேசிக்க உருவாகவந்த இறைவனும் முனிவஞக விளங்குகின்ருர். முனிவர்களுக் குரிய முக்கியவிரதம் (திரிஷவனம்) மூன்று நேரம் நீட்டல். ஆகவேதான் (அபிஷேகப்ரியசிவ) அபிஷேகத்தில் விருப்பமுள்ளவர் சிவன் என்று சான்ருேர் போற்றியிருக்கின்றனர்.

## VIII மண்டலாபிஷேகம்

நாற்பத்தைந்து நாட்கள் தொடர்பாக அபிஷேகம் பூசை நடைபெறுகின்றன: பொருட்கள் வசதி குறைந்தவர் வேறு வசதிக் குறைவுகளாலும் 20 நாட்கள் தொடர்ந்து அபிஷேகம் செய்து முடிப்பார்கள். கும்பாபிஷேகம், மகாபிஷேகம், மண்டலாபிஷேகம், மூன்று கிரியைகளிலும் அபிஷேகம் என்னும் சொல்லால் குறிக்கப்பட்டுள்ளது. அபிஷேகத்தில் விருப்பம் உடையவர் சிவன் என்ற கூற்றை அனுசரித்து அமைந்தது மகாபிஷேகம். மண்டலாபிஷேகம் இவ்விரு கிரியைகளும் இறைவனின் (சாந்நித்தியத்தை) திருவருள் நிறைவை உண்டுபண்ணுவதாய் அமைந்தவை.

## IX முடிவுரை

அண்மையில் கோண்டாவில் ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகரின் மகா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கூட்டியுள்ளது. அக்கும்பாபிஷேக மலரில் இக்கட்டுரை வெளிவருவதும் அவன் அருள்தான் என்று கருதுகின்றேன். ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகரின் அடியார்கள் இக் கும்பாபிஷேகத்தில் கலந்து நிகழ்ச்சிகளில் பங்குபற்றித் தரிசித்துச் சகல இஷ்டசித்திகளையும் பெற்றுய்வார்களாக.

சுபமஸ்த்து

### விநாயகர் துதி

கும்பமா முனியின் கரகநீர் கவிழ்த்துக் குளிர்மலர் நந்தனங் காத்துச்
செம்பொனுட் டிறைவர்க்கு அருளிய நினது திருவருட் பெருமையை மறவேஞ்
நம்பினூர்க் கினிய அருண்மகப் பேறே நற்குணத் தோர்பெரு வாழ்வே
வம்பரு மலர்த்தார் மழைமுகிற் கூந்தல் வல்லபைக் கணேசமா மணியே.

உ
சிவமயம்

# கோண்டாவில் கிழக்கு
# அற்புதநர்த்தன விநாயகர்
# கீர்த்தனைகள்

"திருமுறைப் பண்ணிசைமணி" ப. சிவசுப்பிரமணியம்

இராகம் : ஹம்சத்வனி தாளம் : ஆதி

**பல்லவி**

அற்புத நர்த்தன விநாயகா
அடியிணை தொழுதேன் அபயம் அபயம் ஐயா

**அநுபல்லவி**

நற்றவர்க்கினிய கற்பகக் களிறே
அற்றவர்க் கருளும் அன்பின் உருவே;

**சரணம்**

நினைப்பவர் நெஞ்சில் நீங்கா துறைபவன்
நெக்குநெக் குருகுவார் நினைப்பவை முடிப்பவன்
அனைத்துயிர் காத்திடும் அம்மையே! அப்பனே!
தினைப்பொழுது முந்தன் திருவடி மறவேன். 1

கோண்டாவிற் பதி கோயில்கொண் டருளி
வேண்டுவார் வேண்டும் வரமளித் தருளி
நீண்டபிறவித் துயர் நீக்கி — எம்மை
ஆண்டு அருள்வாய் ஐங்கர னே. 2

இராகம் : சாமா தாளம் : ஆதி

**பல்லவி**

அருள்புரி ஐங்கரனே — ஆனைமுகனே
அருள்புரி ஐங்கரனே.

**அநுபல்லவி**

உருகிஉருகி உள்ளம் உனையே உணர்ந்துபாட
கருணைமழை பொழியும் கணபதியே சரணம்.

**சரணம்**


ஓங்கார தத்துவம் ஒன்றிய வடிவே
நீங்கா துன்னடி நித்தமும் மறவேன்
தீங்கா யென்னைத் தீண்டிய தீவினை
ஆங்காரம் போக்கும் அன்புருவே சரணம். 1

மூத்திநெறி அறியா மூர்க்கரொடு முயலும்
சத்தி சிறிது மில்லாத் தமியேற்குத் தாயாகிப்
பத்திநெறி காட்டிப் பாவவினை அகற்றும்
சித்தி விநாயகா திருவடி சரணம். 2



கோண்டாவில், ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் கோயில்
மூலவரும் உற்சவ மூர்த்திகளும்

உ



# கோயில்

இலக்கிய கலாநிதி, பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

கோவிலுட் பிரவேசிக்கமுன் உயிர்க்கும் இறைவனுக்குமுள்ள தொடர்பை விசாரிப்பது நல்லது. தொடர்பை அறிவது சமயத்தின் அடிப்படையான மூல உண்மையை அறிவதாயிருக்கும்.

இறைவன் உயிர்க்குயிர். உயிர் இறைவனை விலகியிருப்பதில்லை. இறைவன் உயிர்க்குயிராயிருந்துகொண்டே எங்குமாயிருப்பன்; ஆகாசம் போல.

இறைவனை, 'அத்துவிதவஸ்து' என்கின்றார் தாயுமானவர். அத்துவிதமாவது இரண்டற்ற இரு பொருட் கூட்டரவு. இறைவனுக்கும் உயிருக்குமுள்ள கூட்டரவு. நித்தியமான கூட்டரவு.

இறைவன் அநாதியிலேயே உயிரோடத்துவிதப் பட்டிருக்கின்றான். அப்படியிருந்தும் உயிரானது இறைவனோடு அத்துவிதப்படுகின்றிலது. அத்துவிதப்படவேண்டியது. அத்துவிதப்படுகின்றிலது.

உயிர் இறைவனோடு அத்துவிதப்படுகின்றிலது என்ற கருத்து. சதாகாலமுஞ் சிந்தனையில் இருத்த வேண்டிய கருத்து. முக்கியமான கருத்து.

ஏன் உயிர் இறைவனோடு அத்துவிதப்படுகின்றிலது என்பது பெரிய கேள்வி.

உயிர் அநாதியிலேயே அறியாமையாகிய ஆணவ இருளில் அத்துவிதப்பட்டிருக்கின்றது. உயிர், தன்னோடு அத்தவிதப்பட்டிருக்கும் இறைவன் பேரொளிப் பிழம்பாயிருந்தும், குருடுபட்டுக் கிடக்கின்றது. பேரொளியைத் தாங்கும் ஆற்றல் உயிர்க்கின்மையின், பேரொளியும் இருள்செய்து விடுகின்றது.

'ஒளியும் மிகஇருளே' என்கிறது திருவருட்பயன்.

ஆணவ இருளுடன் இறையொளியும் இருள்செய்வதினால், உயிரின் கதி என்னாம்! உயிர் படுகுருடாய் விடுகின்றதே.

இனி உயிர்க்கு உய்தியில்லையா? உண்டு! உண்டு.

இறைவன் நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதன். நட்டம் - நடனம். பஞ்சகிருத்திய நடனம். அந்த நடனப்பேறே இந்தச் சரீரம். (இது மூக்குக் கண்ணாடியோடு ஒப்பிடத் தக்கது)

இறையானது தன் பேரொளிப் பிழம்பைத் தணிக்கை செய்து, மிருதுவானதொரு அருள் ஒளிக் கிரணத்தைச் சரீர மூலம் உயிர் அறிவோடு அத்துவிதப்படுத்தி, உயிர் அறிவு விருத்தியாதற்கு உபகரிக்கின்றது.

கண் — புறவொளியோடு அத்துவிதப்பட்டு, அவ்வொளி காண்பதைத்தானும் காண்ப தன்றி, தானுக ஒன்றையுங் காணுது.

அவ்வாறே உயிரறிவு சரீரமூலம் அருள்ஒளிக் கிரணத்தோடு அத்துவிதப்பட்டு, அது அறிவதைத் தானும் அறிவதன்றி, தானுக ஒன்றையும் அறியாது.

உயிரின் அறிவு விருத்தி உயிரறிவோடு அருள்ஒளிக்கிரணம் அத்துவிதப்படுவதிலேதான் தங்கியிருக்கின்றது.

அருள்ஒளி, உயிரறிவோடு அத்துவிதப்படுதற்கு இச்சரீரம் இன்றியமையாதது.

இச்சரீரம் பேரிருள் சிறிதே விலகுதற்குக் கிடைத்ததொரு சிறு விளக்கு.

'விடிவாம் அளவும் விளக்கு' — என்கிறது திருவருட்பயன்.

'இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்' என்பது நாவலர் பெருமான் வாக்கு. இவ்வசனத்தில் 'கிடைத்தது' என்ற வார்த்தை மிக்க கருத்துள்ளது — சரீரம் இறைவனிடமிருந்து கிடைத்ததென்பது கருத்து.

இறைவனிடமிருந்து கிடைத்த சரீரத்தை, இறைவன் கருத்தறிந்தே பயன்படுத்த வேண்டும்.

திருமூலர், 'உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே' என்கின்ருர்.

உயிரை வளர்த்தலாவது: உயிர் தன்னேடு அத்துவிதப்பட்டிருக்கும் இறையோடு உயிராகிய தானும் அத்துவிதப்படுதற்கு வழி செய்தலாம்.

இந்தச் சரீரம் என்ற வசனத்தை மீண்டும் நினைவு கூர்ந்து, திருமூலர் கருத்தை அவ் வசனத்திலும் காண்க.

சரீரம் நமக்குக் கிடைத்த கோயில்.

சரீரக் கோயிலைப் பேணுகிற முறையில் பேணுதற்குப் பெரிய சாதனமாயிருப்பவைகள் பூமியில் உள்ள கோயில்கள்.

இக்கோயில்களில் தாமாக உண்டானவைகளும் உண்டு. உண்டாக்கப்பட்டவைகளும் உண்டு.

'' புறத்திணை மருங்கிற் பொருந்தினல்லது
அகத்திணை மருங்கில் அளவுதலிலவே'' என்பது தொல்காப்பியம்.

திணை — ஒழுக்கம்.

புற ஒழுக்கம் புனித சாதனத்திலேதான்,

அக ஒழுக்கம் சாத்தியமாகும் என்பது கருத்து;

ஆலய வழிபாடு சாதனம்;

அக ஒழுக்க விளைவு சாத்தியம்.

'கிரியையென மருவுமவை யாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்' என்பது இவ் விப்பிரகாசம்.

ஆலயக் கிரியைகள் ஞானசாதனம் என்பது கருத்து.

ஒருவனுக்குக் கணிதம் வருமா என்பதைக் கணிதம் வல்ல ஆசிரியன், அம்மாணவன், கணித விடை காணச் செய்யும் கிரியைகளின் படிக்கிரமத்தில் வைத்துக் கணிக்கின்றான்.

திருஞானசம்பந்தப் பிள்ளையார் அபரசுப்பிரமணியர். தேவியிடம் ஞானப்பால் பருகியவர். பிள்ளை தலந்தோறும் வழிபாடு செய்தாராயின், ஈழத்திலுள்ள திருக்கேதீசுவரம், கோணேசுவரங்களை நினைவு கூர்ந்தாராயின், அகவிருத்திக்கு ஆலய வழிபாடு எத்துணை வேண்டப்படுவதென்பது அறியத் தக்கது.

பதஞ்சலி, வியாக்கிரபாதர் சிவயோகந் தலைக்கூடுபவர்கள். அவர்களே ஆலய வழி பாட்டுக்கு வழிகாட்டிகளாய் விளங்குவார்களாயின் அதன் பெருமையைக் கணிப்பது எங்ஙனம்?

புணர்ந்தாற் புணருந்தொறும் புதிதாய் நடக்கும் வீடுபேற்றுக்கு, முக்கிய சாதனம் ஆலய வழிபாடு. அதுவும் புணர்ந்தாற் புணருந்தொறும் புதிது புதிதாய் நடக்கற்பாலதாம்.

எல்லாம் அறிந்த உலக அன்னையின் வாக்கு, 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பது.

கோயிலின் புனிதத் தன்மையையும், வழிபடுவோரின் தகுதிப்பாட்டையும், வழிபடுங் கிரமங்களையும் சாஸ்திரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

வழிபாட்டில் அநுட்டிக்க வேண்டிய இரு விரதங்கள் முக்கியமானவை.

முதலாவது, 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்பது புறநானூறு.

நமது துன்ப இன்பங்களுக்கு நாமே கருத்தா. பிறரோ, பிறவோ வெறுங் கருவிகள் வாயில்கள். துன்பக் காலத்தில் கருவிகளாகிய வாயில்களை நோவது, எய்தவனிருக்க அம்பை நோவதாம். அன்றி இருக்கிற வினை போதாமல், மேலும் வினையைப் பெருக்குவதாம்.

துன்பம் பொறுக்க முடியாதிருந்தால், தம் கன்ம நிலையைக் கூட்டிவைத்த தெய்வத்துக்கு நன்றிகூறி 'பொறுக்க இயலவில்லை தணித்தருளல் வேண்டும்' என்று தவமிருக்கலாம், துன்புறுவோன் சாந்தி பெறுதற்கு இதுவே வழி.

இரண்டாம் விரதம்; துன்புறுத்துவோன் மேற்கொள்ள வேண்டியது.

ஒருவன் தன்னைத்தான் காதலிக்க வேண்டும்; காதலித்தலாவது தன்மேல் தான் அன்பு செய்தல். தன்மேல் அன்புள்ளவன் பிற உயிர்க்குத் தீங்கு நினைக்க மாட்டான். பிற உயிர்க்குத் தீங்கு நினைத்தால் நினைத்தவனுக்குத்தான் பெரிய நட்டம். பிற உயிரை வருத்த எவனுக்கும் அதிகாரமில்லை.

துன்புறுவோன் நிலையிலும், துன்புறுத்துவோன் நிலை பரிதாபகரமானது. துன்புறுத்துவோனுக்கு இப்பிறப்பில் பரிகாரமில்லை. துன்புறுவோனுக்குப் பரிகாரம், முதலாம் விரதத்திற் சொல்லப்பட்டது.

கோயில் என்னும் வார்த்தை விசேடமாகச் சிதம்பரத்தையே குறிக்கும்.

சிதம்பரம் பூமியில் உள்ள கைலாசம்.

உ
சிவமயம்



# ‘பூவினுக்கு அருங்கலம்’

வித்துவான் க. சொக்கலிங்கம் M. A.
(அதிபர், யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்)

மனித வாழ்க்கையிலே பூக்கள் வகிக்கும் இடம் மகத்தானது. பூக்கள் பூமகளின் புன்னகை போலப் பொலிவுடையவை, தெய்வத்தின் இன்னருள் போலும் தூய்மை வாய்ந்தவை. காதலர்தம் நெஞ்சங்கள் என்னக் கனிவுடையவை. அன்னையின் அகம் அனைய நன்மணத்தினை எங்கும் பரப்பிப் பரிமளிப்பவை. எனவே பண்டுதொட்டு இன்றுவரை பரமனின் திருவுருவிற்குப் பூவினை மாலையாக்கி அணிந்தும், திருப்பாதங்களில் அர்ப்பணித்தும் பத்தர்கள் பரவுகின்ற வழக்கம் இருந்து வருகின்றது. ‘பூவார் மலர்கொண்டடியார் தொழுவார்’ என்பது தேவாரத் திருவாக்கு. இறைவனுக்குச் செய்யும் வழிபாடு பூக்கொண்டே செய்யப்படுகின்றது. ‘பூவாற் செய்யப்படுவதாலே இறைவழிபாடு, பூசெய் – பூசை – என்றாயிற்று’ என்று மொழிவல்லார் கூறுவதும் நோக்கி இன்புறத் தக்கது.

இந்திய மெய்யியல் (Indian Philosophy) கூறும் வாழ்க்கைத் தத்துவம் நான்கே எழுத்துக்களுள் அடங்கி விடுகிறது. அதுதான் ‘Duty’ என்பர் பேரறிஞர் மாக்ஸ்முல்லர் (Max Muller). ஆம்! இந்திய மெய்யியலுக்குப் பண்பும் பயனும் வழங்கிடும் இந்துசமயமானது ‘Duty’ என்னும் கடமையிலேயே கால்கொண்டுள்ளது. ‘என்கடன் பணிசெய்து கிடப்பதே’ என்பர் அப்பர் சுவாமிகள். ‘பற்றற்றுச் செயல்புரி’ என்பது பகவத் கீதையின் உயிர்நாடியான உபதேசம். பற்றிலே தோய்ந்திடாது, வண்டு முதலான உயிர்களுக்கும் மனிதப் பிராணிகளுக்கும் பண்டுதொட்டுத் தமது கடமையினை எதுவித பிரதிபலனும் நோக்காது செய்து வருகின்றன பனி மலர்கள்.

சைவ சித்தாந்தம் இறைவனை வழிபட்டு உய்யும் நெறியினை நான்கு பாதங்களாய் வகுத்துள்ளது. அவற்றுள்முதலிற் குறிக்கப்படுவது சரியை வழிபாடு. கோயிலிலே செய்யவேண்டிய திருத்தொண்டுகளே சரியை வழிபாடாகும். திருநந்தவனம் அமைத்தலும் மலர்மாலை கட்டி இறைவனுக்கு வழங்கலும் இந்த வழிபாட்டில் முதன்மையிடம் பெறுகின்றன. ‘பூமாலை புனைந்து ஏத்திப்’ புகழ்ந்து பாடும் பழக்கம் அப்பர் பெருமான் முதலான சமயகுரவர் வகுத்துக் காட்டிய வழியாகும். இன்ன இன்ன கடவுளருக்கு

இன்ன இன்ன மலர்கள் உரியவை என்று வகுத்துக் கூறும் நூல் ஒன்று வடமொழியில் உண்டு. 'புட்பவிதி' என்பது அந்த நூலின் பெயர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் இதனைத் தமிழாக்கிச் சைவமக்களுக்குத் தந்துள்ளார்.

பூக்கள் யாவுமே சிறந்தவைதாம். அவற்றுள்ளும் மிகச் சிறந்தது தாமரை என்பர். அது எமது சமய தத்துவத்திற்கு நல்லதோர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. தாமரைக் கொடி சேற்றிலே வேரூன்றி நிற்கிறது. பிரபஞ்சம் என்கிற சேற்றிலே ஆன்மாக்கள் அழுந்திக் கிடப்பதற்கும் இதற்கும் வேறுபாடு இல்லை. தாமரைக் கொடியின் தண்டுகள் நீரினுள்ளே கிடக்கின்றன. ஆன்மாக்களுள் ஓரளவு உயர்ந்தனவான மானிட சீவன்கள் சற்றே மேலோங்கித் 'தெய்வம் என்பதோர் சித்தம்' உண்டாகப் பெற்றுச் சற்றே ஒளியினைக் காண்பதற்கு இது ஒப்பாகும். நீரின் மேல் தளத்திலே தாமரை இதழ்கள் கிடக்கின்றன. அவை தண்ணீரிலே ஒட்டியும் ஒட்டாதவையாய் உள்ளன. மனித சீவன்களிலே மாயையினின்றும் நீங்கிக் கன்மத்தை மட்டும் செய்துகொண்டிருக்கும் ஒரு பகுதியை இந்தத் தாமரை இதழ்களுக்கு ஒப்பிடலாம். தாமரை மலரோ தண்ணீரையும் கடந்து வானத்தில் ஒளி விடும் கதிரோனைக் காதலித்து அவனது ஒளியிலே மலர்ந்து பொலிந்து விளங்குகின்றது. இதுபோலவே ஞானத்தை அடைந்துவிட்ட ஆன்மாக்கள் இறைவனுகிய கதிரோனின் திருவருள் ஒளியைப் பெற்றுப் பிரபஞ்சப் பற்றுக்களை முற்றத் துறந்து, அவற்றைக் கடந்து, ஆனந்த மயமாகிக் காட்சி தருகின்றன. எனவே மலர்களுள்ளே தாமரை மலர் சிறந்தது என்று கூறுவது பொருத்தமே. ஏனெனில் அது முற்றத் துறந்த ஞானியை ஒத்ததாகும்.

"பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்டம் இல்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே"

— அப்பர் சுவாமிகள்

உ

சிவமயம்

# கோண்டாவில்
# அற்புத நர்த்தன விநாயகர் துதி

— அருட்திரு வடிவேல் சுவாமிகள்

பொன்னார் புரிசடைப் புண்ணியனார் தந்தபோத வள்ளல்
என்னார் அமுது எனையாண்ட என்குருவாகி வந்து
பொன்னும் பொருளும் பொலிவுபெற்று ஓங்கும்பதி அதுவாம்
கோண்டாவில் நற்பதிக் கோயில் கொண்டான் என்குருமணியே! 1

கண்டார்க்கும் காணாதவர்க்கும் கருணையே காட்டிடவே
தொண்டாகி வந்துதொழும் அடியார்தம் தொல்வினையை
கீண்டே கிருபையைப் பூண்டே கிருபைக்குஒரு முகிலாய்
கோண்டாவில் நற்பதிக் கோயில் கொண்டாய் என்குருமணியே! 2

தூண்டா விளக்கின ஒத்தநிருத்த விநாயகப்பேர்
பூண்டே அடியவர் புன்மை தவிர்த்தருள் செல்வம்மல்க
ஆண்டாண்டு தோறும்அருள் மாரியென்ன அமர்ந்திருப்பாய்
கோண்டாவில் நற்பதிக் கோயில் கொண்டாய் என்குருமணியே! 3

பண்ணார்இசைபல பாடிப்பணிந்திடும் பக்தருக்கு
மண்ணாளும் செல்வம்மகிழ்ந் தளிப்பாய் மறைநால்முதலாம்
கண்ணாய கல்வியினின் சுவைதனையும் காட்டிவைப்பாய்
மண்ணிற் பழம்பதிக் கோண்டாவில் கோயிலாய்க் கொண்டவனே! 4

அண்டரும் தொண்டரும் அன்புடனே உன்னடிபரவ
கண்டவர் யாவரும் கண்ணீர் பொழிந்து கருணைவெள்ளம்
கொண்டே உன்கோபுர வாயிலில் கும்பிடகோயில் கொண்டாய்
கோண்டாவில் நற்பதிக் கோயில் கொண்டாய் என்குருமணியே! 5

தொண்டுபட்டுய்யும் தொழும்பர்தம் தொல்வினை போயகல
கண்டங்கரிய கடவுள் கருணையினால் அருளும்
துண்டப்பிறை யணிந்து ஆடும் நிருத்த விநாயகனை
கண்டுகளித்திட கோண்டாவில் கோயிலைச் சேர்மின்களே! 6

கண்டாருளத்தினில் காலூன்றிப்பெய்யும் கருணைமுகில்
அண்டாதவர்க்கு அறிவரியான் அருளாளர் தங்கள்
தொண்டாகும் அன்பர்க்கு கோதில் அமுதையவர்க்கருளி
கோண்டாவில் நற்பதி கோயில் கொண்டான் நம்குணக்குன்றமே! 7

நித்தம் நினைந்து நியமம்பலபல செய்யும் அன்பர்
எத்திக்கினும் அவர் எண்ணிய எண்ணிய யாவும் நல்கும்
தித்தித்திமி யென்று ஆடும் நர்த்தன விநாயக நின்கருணை
எத்திக்கினும் நிறைவெய்திட நின்ற கோண்டாவில் இதே. 8

சிவமயம்

# "அகக் கோயில்"

## — வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் —

"சகமலா தடிமையில்லை தானலாற் துணையுமில்லை
நகமெலாம் தேயக் கையால் நாண்மலர் தொழுதுதூவி
முகமெலாம் கண்ணீர் மல்க முன்பணிந் தேத்துந் தொண்டர்
அகமலாற் கோயிலில்லை ஐயன் ஐயாறனுற்கே"

அகிலமெலாம் புரக்கும் பரம்பொருள் எங்கும் நீக்கமற நிறைந்து காணப் படுகின்றான். அண்டத்துள் உறையும் ஆண்டவன் அணுவின் வேரிலும் குடி கொண்டிருக்கிறான். மலையில் உறையும் மங்கைபங்கன் மலரின் எழிலிலும் திகழ்கின்றான். தீயிடை வெம்மையாய் விளங்குபவன் புனலிடைத் தண்மை யாய்ப் பொலிகின்றான்.

" மனத்தகத்தான் தலைமேலான் வாக்கினுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்
ஏழண்டத்துப் பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங் கொன்றைப் போதினுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சியுள்ளான்
காளத்தியான் அவன்என் கண்ணுளானே."

என்று காளத்திக் கொழுந்தைக் கண்டு களிக்கின்றார் அப்பர் பெருமான்.

பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்து விளங்கினாலும் சிறப்பாக இறை வன் அன்பு செய்வார் அகத்தினுள்ளே உறைகின்றான். இதனைத் திருநாவுக் கரசர்.

"அன்புடையார் சிந்தை அகலான் போலும்" என்று திருஇன்னம்பர்த் திருத்தாண்டகத்துள் குறிப்பிடுகின்றார். இறைவனை அன்பு செய்வது எவ் வாறு? பொன்னும், மணியும், மிகுபொருளும் கொடுத்துப் பெருமானை நம் பக்கம் இழுக்கலாமா? ஒரு பொருள் ஒருவருக்குத் தேவைப்பட்டால் அந் தப் பொருளால் அவரை வளைக்கலாம். ஆனால் அகிலமெல்லாம் படைத்துக் காத்து, அளித்து வேண்டுவார் வேண்டுவதே ஈயும் இந்த வள்ளலோ பொன் னார் மேனியன். உறையும் இடமோ வெள்ளிமால்வரை. மனைவியோ.... மர

கதச் செல்வி. அருமருந்தன்ன மைந்தர்களில் ஒருவன் முத்துக் குமரன்.... மற்றவன் மாணிக்க விநாயகன். மைத்துனனே செல்வத்திற்கு அதிதேவதை யான திருமகளை மணந்தவன். இப்படி எங்குநோக்கினும் செல்வ வளம் கொழிக்கும் பிஞ்ஞகனு நாம் அளிக்கும் பொருளுக்கு மயங்குபவன்....? பின்.... பெருமானது அன்பைப் பெறுவது எங்ஙனம்? அதற்கு வழி உண்டா? இருக் கிறது. நெக்கு, நெக்கு நினைபவர் நெஞ்சுளே அவன் புக்கு நிற்பான்.

''உயிராவணம் இருந்து உற்று நோக்கி
உள்ளக் கிழியின் உருவெழுதி,
உயிர் ஆவணம் செய்திட்டு உன்கைத் தந்தால்
உணரப் படுவரோ டொட்டி வாழ்தி,''

என்னும் திருத்தாண்டகம் ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி, ஓடும் மனத்தைத் தடுத்து நிறுத்தி, உள்ளமாகிய கிழியில் ஆனேறுயர்த்த ஐயனின் திருவுரு வத்தை எழுதி, உயிரும் உடலும் ஒன்றுகின்ற யோகமுறையை உணர்த்து கின்றது.

எண்ணங்கள் அலையும் இயல்புடையது. ஒன்றுவிட்டு ஒன்று பற்றும் தன்மையது. இதனை வாக்கின் மன்னவர்,

''உறுகயிறூசல் போல ஒன்றுவிட்டு ஒன்றுபற்றி
மறுகயிறூசல் போல வந்துவந் துலவும் நெஞ்சம்
பெறுகயிறூசல் போலப் பிறைபுல்கு சடையாய் பாதத்
தறுகயிறூசலானேன் அதிகை வீரட்டனீரே.''

கள்ளம் புகாத வெள்ளை உள்ளத்துடன் கண்ணுதற் பெருமானை நம் அகத்தில் இருத்தி வழிபட்டால், கனியினும் இனியனுய், கட்டிபட்ட கரும்பி னும் இனியனுய், பனிமலர்க்குழல் பாவை நல்லாரினும் இனியனுய், தனி முடி கவித்தாளும் அரசினும் இனியனுய்க் காட்சி தருவான்.

ஆகம் பகிர்ந்தளித்த மாதொரு பாகனுர்க்கு அகவழிபாடு இயற்றுவது எவ்வாறு? நமது உடலையே வினை கெடுத்தாளும் வேதியன் உறையும் கோயிலாக்கி, உலையும் மனத்தை உருவத் திருமேனியாக்கி, அன்பாகிய வெள் ளத்தால் நீராட்டி, கொல்லாமை, ஐம்பொறி அடக்கம், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்ற எண்வகை மலரால் (அட்டபுஷ்பம்) அகப் பூசனை புரிதல் வேண்டும். இப் பூஜாகாலத்தில் இன்றியமையாது வேண்டப்படுவது ஆழ்ந்த அன்பு. இவ் அன்பு இல்லாது ஆரவாரமும் ஆடம் பரமும் மிக்க புறப்பூஜையைப் புனிதன் ஏற்றுக் கொள்ளாமல் எள்ளி நகை யாடித் தள்ளி விடுவானும்.

"நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவும் நீருங் கண்டு
நக்கு நிற்பன் அவர்தம்மை நாணியே"

என்ற திருக்குறுந்தொகைப் பாடல் நமக்கு எச்சரிக்கை விடுக்கின்றது. இதனையே அன்னையின் அருள்பெற்ற அபிராமிப்பட்டரும்,

"மெய்வந்த நெஞ்சினல்லால் ஒருகாலும் விரகர் தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகலறியா மடப்பூங்குயிலே"

என்று கூறி நிற்கின்றார்.

அன்பிற்கு நெகிழும் ஆண்டவன் ஆணவத்துடன் இயற்றும் புறவழிபாட்டில் ஒன்றுவதில்லை என்பதைத் திருமூலர்;

"என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனலில் பொரிய வறுப்பினும்
அன்போடுருகி அகங் குழைவார்க் கன்றி
என் பொன்மணியினை எய்த வொண்ணாதே"

தாடகை நல்லாளின் அன்பிற்கு முடிதாழ்த்திய இறைவனைச் சோழமன்னன் நால்வகைப் படைகளின் பலமுங்கொண்டு நிமிர்த்த எண்ணினான். தோல்வியைத் தழுவினான். கடவூர்க் கலயனார் தனது அன்பையே கயிறாக்கி இழுத்தார். ஆண்டவன் நிமிர்ந்தான். அன்பிலே வளைந்தவன் அன்பிலே நிமிர்ந்தான்.

"நண்ணிய ஒருமை அன்பின் நாருறு பாசத்தாலே
திண்ணிய தொண்டர் பூட்டி இளைத்தபின் திறம்பிநிற்க
ஒண்ணுமோ கலயனார்தம் ஒருப்பாடு கண்டபோதே
அண்ணலும் நேரே நின்றார் அமரரும் விசும்பில் ஆர்த்தார்"

காடவர்கோன் கழற்சிங்கன், பொன்னாலும், மணியாலும், கல்லாலும், சுதையாலும் எடுத்த கற்கோயிலை விரும்பாது திருநின்றவூரில் உறைந்து வந்த பூசலார் என்ற அடியவர் பொருட்பேறு இல்லாது, அருட்பேறு ஒன்றையே ஆதாரமாகக் கொண்டு எழுப்பிய "அகக் கோயிலை"யே ஆதாரத்தானமாகக் கொண்டான் அருமறை வல்லான்.

இவ்வாறு பக்திவலையிற்படும் பரம்பொருள், நமது இருவினையை ஈடழித்து இன்பம் விளைக்கும் இணையிலியை, தில்லைத் தொல்லோனை, தித்திக்கும் தீங்கரும்பை நமது அகக்கோயிலில் அமர்த்தி ஆனந்தம் அடைவோமாக!

உ
சிவமயம்

# கோண்டாவில் கிழக்கு
# ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர்
# திருப்பொன்னூஞ்சல்

## காப்பு

சிற்பரனே திருமுறையின் சீர்விளங்க
திருத்தொண்டன் நம்பி மனங் கனிந்திரங்க
தற்பரனாய் வந்தருளும் தேவ தேவா
தயாபரனே கனிவாங்கித் தந்தை தாயர்
பொற் பிணையிவ் வுலகுணரும் செயல் புரிந்த
புண்ணியனே கோண்டாவில் குணபால் மேய
அற்புத நர்த்தன விநாயகரே ஞான
ஐங்கரனே நின்கழலெங் காப்பதாமே. 1

முப்பத்து முக்கோடி தேவர் கூடி
முந்துதவத் தாலறிய முடியா தேங்கும்
ஒப்பரிய பிரணவனே உமையாள் பெற்ற
உத்தமனே நாற்சுருதிக் குயிராய் நின்று
செப்பு மொரு வடிவில்லாச் சிவக் கொழுந்தே
செல்விவல் லபைக்குரிய கணவா தில்லை
அப்பனே கோண்டாவிற் குணபால் மேய
அற்புத நர்த்தன கணேசர் ஆடிரூஞ்சல்; 2

பொன்பரவு செம்பவள மேனிதாங்கி
பொருந்து மொரு கஜவதனப் பொலிவிலோங்கி
மின்பரவு மணிமகுடச் சடையிலங்க
விடுபாச மங்குசமெய்க் கரந்துலங்க
முன்பரவு மேருகிரி மறைவ ரைந்த
மூர்த்தியே முக்கண்ணு மூலாதார
அன்புருவே கோண்டாவில் குணபால் மேய
அற்புத நர்த்தன கணேசர் ஆடிரூஞ்சல். 3

ஞானந்த னுருவான வோங்கா ரத்துள்
நடுநின்ற நான் கெழுத்துப் பதுமமீது
தேனுந்து குண்டலியாய்த் தீபம் காட்டும்
சிவானந்த மோனவெளிச் சகஸ்ராரத்தில்
வானுந்து மமிர்தசுவை வழங்கும் தேவா
வருமடியர் குறைநீக்க மனமிரங்கி
ஆனந்தக் கோண்டாவில் குணபான் மேய
அற்புதநர்த் தனகணேசர் ஆடீரூஞ்சல். 4

பொருளதிக உபநிடதம் பீடமாக
பொங்குசதுர் மறை நாற்கால் மாடமாக
தெருளதிக ஆகமங்கள் மாலையாக
திறமிகுதத் துவங்களெழிற் சோலையாக
உருளதிக புவனங்கள் கழற்பூணாக
உதித்தசரா சரங்கள்பரி வாரமாக
அருளதிக கோண்டாவில் குணபான் மேய
அற்புதநர்த் தனகணேசர் ஆடீரூஞ்சல். 5

பகருமரன் அரிபிரமன் தேவராஜன்
பயிலட்ட திசையதிபர் வரிசை கூட
திகழுமிசை முனிவர்துதி மாலை சூட
சிவசத்தி யிசையடியார் ஊஞ்சல் பாட
அகிலசரா சரகோடி சிவிகை தாங்க
ஆடும்கொடி குடை முதலாம் விருது தேங்க
அகரநிகர் கோண்டாவில் குணபான் மேய
அற்புதநர்த் தனகணேசர் ஆடீரூஞ்சல். 6

தந்தைவரு தேரிறுத்த விக்ன ராஜா
தவமுனிவன் கமண்டலத்தைக் கவிழ்த்த வீரா
சிந்தை மகிழ் கோகர்ண லிங்கம் வாங்கி
திருக்கோயி லமைத்தசிறு சிவகுமாரா
வந்தபெரு நாகமதை யரைக் கசைத்து
மயூரத்தில் வீற்றமர்ந்த மகா கணேசா
ஐந்தெழுத்துக் கோண்டாவிற் குணபான் மேய
அற்புதநர்த் தனகணேசர் ஆடீரூஞ்சல். 7

பஞ்சாடும் சமராடி யசுரை மாய்த்தாய்
பயின்றுடும் மந்திரத்து முதலாய் மூத்தாய்
மஞ்சாடும் மலையழகி யழைக்க வந்தாய்
வனமாடும் வள்ளி மணம் தழைக்க வந்தாய்
நெஞ்சாடும் சிவசோதி யாக நின்றாய்
நீறுடும் தொண்டர் மனம் நிறைந்தாய் கோவின்
அஞ்சாடும் கோண்டாவில் குணபான் மேய
அற்புதநர்த் தனகணேசர் ஆடீரூஞ்சல். 8

நிலங்காணும் செழித்தவளம் நிறை நீர்வாவி
நெறிகாணும் கலைச்செல்வம் நீதி நேர்மை
குலங்காணும் தவஞானம் குவியும் யோகம்
கொடைகாணும் மனம்பூத்த குண நலங்கள்
கலங்காணும் உணவெல்லாம் கருதும் வண்ணம்
கற்பகமா யருள்புரியும் தேவ தேவா
அலங்காரக் கோண்டாவில் குணபான் மேய
அற்புதநர்த் தனகணேசர் ஆடீரூஞ்சல். 9

ஏகதந்த மங்குசபா சங்கைச் சூதம்
இணைந்தாட இரவிமுக ஜோதி யாட
மேகநிறச் சடையாடச் சுட்டியாட
மிளிர்கழலும் மூஷிகவா கனமு மாட
நாகமணி வயிருடப் பூணு லாட
ஞானவல் லபையாடப் பூதமாட
ஆகமனே கோண்டாவில் குணபான் மேய 10
அற்புதநர்த் தனகணேசர் ஆடீரூஞ்சல்.

தருமமுகி லருளுடையீர் ஆடீரூஞ்சல்
தனிநாரை யூருடையீர் ஆடீரூஞ்சல்
திரு வரங்கன் மருமகனே ஆடீரூஞ்சல்
திகழ் சதுர்த்தி நாயகனே ஆடீரூஞ்சல்
வருபிறவி யறுப்பவனே ஆடீரூஞ்சல்
வல்லபைபங் கிருப்பவனே ஆடீரூஞ்சல்
அருமந்த கோண்டாவிற் குணபான் மேய
அற்புதநர்த் தனகணேசர் ஆடீரூஞ்சல். 11

## வாழி

சொற்பெரிய சுருதிபுரா ணங்கள் வாழி
தூநீறும் சிவமணியும் தொண்டும் வாழி
முற்படுமா லயபூசை நிறைவாய் வாழி
முழங்குதிரு முறைபாடும் தவத்தோர் வாழி
கற்புமிகு நன்மக்கட் சேவை வாழி
கழனிபொலி மழைவாழி பசுக்கள் வாழி
அற்புதநர்த் தனகணேசர் அருட்டாள் வாழி
அவனடியர் கூட்டமெலாம் வாழி வாழி. 12

## எச்சரிக்கை

சோதிவடி வானசுந் தரனே எச்சரிக்கை
தும்பிமுக முடையஐங் கரனே எச்சரிக்கை
ஓதியுணர் வரியதற் பரனே எச்சரிக்கை
உண்மையறி வானந்தா ஹரனே எச்சரிக்கை
நீதிநெறி யுதவுமறை நிமலா எச்சரிக்கை
நினைவாருக் கருள்பாத கமலா எச்சரிக்கை
ஆதிநடு முடிவிலா தவரே எச்சரிக்கை
அற்புதநர்த் தனவிநா யகரே எச்சரிக்கை. 13

## பராக்கு

பொன்பரவு செம்மேனி யழகா பராக்கு
பொருந்துநவ மணிவீசும் குழகா பராக்கு
இன்பநான் மறைபுகழும் ஈசா பராக்கு
ஏத்துவார் இதயமுறை நேசா பராக்கு
என்புருகு திருமுறைகள் தந்தாய் பராக்கு
இடர்நீக்கி வழிகாட்ட வந்தாய் பராக்கு
அன்புவளர் கோண்டாவில் ஐயா பராக்கு
அற்புதநர்த் தனகருணைக் கையா பராக்கு. 14

## லாலி

தானதவ வடிவுடையீர் லாலி லாலி
சாத்துவிக நிலையுடையீர் லாலி லாலி
ஈனபவ மொழிப்பவரே லாலி லாலி
இசைநடன விருப்பினரே லாலி லாலி
ஞானமனே தருபவரே லாலி லாலி
நமசிவயப் பொருளினரே லாலி லாலி
ஆனைமுக வித்தகரே லாலி லாலி
அற்புதநர்த் தனகுருவே லாலி லாலி. 15

## மங்களம்

மங்களம் சுபமங்களம் ஜெய
மங்களம் நித்ய மங்களம் 16

சங்கரன் தரு சுந்தரற்கு
திங்கள் ரூபி தந்தவர்க்கு
சங்கு கொண்டான் மருகனுக்கு
சரவணன் றன் தமையனுக்கு (மங்) 17

பொங்கு வேத கணபதிக்கு
புரியுமிருநாற் குண பதிக்கு
ஐங்கரங்கொண் டருள்பவற்கு
அற்புதநர்த் தனமணிக்கு (மங்) 18

உ
சிவமயம்

# குருதேவர்
# கோண்டாவில் கந்தையா சுவாமிகள்

எழுதியவர் : சிங்கைநகர், " இளம்பிறையாளன் "

ஈழத்தைச் சிவபூமியெனப் போற்றியுள்ளார் திருமூலர். இந்த ஞானபூமியில் வழி வழி வந்த அநுபூதி மகான்களுக்குக் குறைவேயில்லை. மகாகவி பாரதியார் போற்றும் யாழ்ப்பாணத்துச் சுவாமிகளில் இருந்து, சரியாக ஒரு நூற்றாண்டு காலத்தில் எத்தனையோ மகான்கள் தோன்றினார்கள். ஞானபரம்பரையில், சின்மயானந்த சுவாமிகளின் கீழ்க் கன்றாக, சாஜன் சுவாமிகள் நின்றார்கள். அவர்களின் வழி கனகரத்தினம் சுவாமிகளும், மகாதேவ சுவாமிகளும் புகழ் பூத்து நிற்கின்றார்கள். மகாதேவ சுவாமிகளிடம் ஆசாரிய அனுபவம் பெற்றவர்கள் இருவர். ஒருவர் ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகள். மற்றவர் தவத்திரு. கோண்டாவில் கந்தையா சுவாமிகள். கோண்டாவிலில் உதித்தமையால் கோண்டாவிற் சாமி என்றும்; கையில் குடையுடன் திரிந்ததால் குடைச்சுவாமி என்றும்; சொந்தப் பெயரால் கந்தையா சுவாமிகள் என்றும் அழைக்கப்பட்டார்

எந்நேரமுஞ் சித்தம் இறைவனருட் குடைக்கீழ் இருக்கின்ற தென்ற நினைப்பும், அந்த நிழலின் கீழ் இருப்பதால் எவ்வித குறையுமில்லை என்ற உணர்வும் கந்தையா சுவாமிகளின் குடைக்கோர் தத்துவமாகும். சுருங்கிய குடை, இறைவன் தொண்டர்தம் உள்ளத் தொடுக்கம் என்பதைத் துலாம்பரப் படுத்துகிறது மட்டுமன்றி, புலனொடுக்கம் வீரஞானியர்க்கோர் வெற்றித்தூண் என்பதையும் குறிப்பாகக் காட்டுகின்றது. இறைவனருட் குடைக்கீழ் எல்லோருமின்ப நிறைவுற்று வாழ்க நிதம் என்னும் இலட்சியம் இவர்களுடைய வாழ்வின் ஊன்றுகோலாயிற்று. எனவேதான் அருள் பார், அருள் பார், அருள் தெரியும் பார் என்று சதா சொல்லிக் கொண்டே இருப்பார்.

1897-ம் ஆண்டிலவதரித்த சுவாமிகள், சுமார் எண்பது வயதைத் தாண்டிவிட்டார். உள்வளைந்த வடிவம்; முழங்கால் வரை இடுப்பில் ஓர் நான்கு முழம்; தோளிற் சால்வை, கையிற் குடை; தாடியுடன் வளர்ந்த சிகை.

அவருடைய மகாவாக்கியங்கள் அருள் வடிவானவை.

" அருள்வான் அருள் வாக்கு "
" அறிவான் அருள் வாக்கு "
" அருள் பார், அருளொளி பார் "
" அருள் தெரியும் பார் "
" எம்பெருமான் நடாத்துவார் "
" எம்பெருமான் உணர்த்துவார் "
" நீ எது சரியென்று நினைக்கிறாயோ அதன்படி நட "
" வேறொருவரையும் எதிர்பாராதே "


திருவாசகத்தில் தீர்ந்த ஞானி. மகா சமாதியடைவதற்கு முதல் நாள் சென்னிப் பத்தையும், நந்தன் கீர்த்தனையையும் படித்துக் கொண்டிருந்தார். சிவவிளைவை வேண்டி நின்றாரென்பதைச் சொல்லாமற் சொல்லி விட்டார். வாரா நெறிக்குத் தம்மை வழிப்படுத்திய சுவாமிகள், பிங்கள வருஷம் மாசி மீ 2-ந் திகதி ( 14-2-78 ) செவ்வாய்க்கிழமை கார்த்திகை நட்சத்திரத்திலன்று மகாசமாதி எய்தினார்கள். அன்று முழுமையும் " அருள் பார்பாஞ்சசன்யம் " என்று சொல்லிக் கொண்டே இருந்தார். இந்தத் தூலத்துடன் இன்னும் ஆறு மணித்தியாலங்கள் தான் இருப்பேன், என்று வடிவேல் சுவாமிகளுக்குக் கூறிய வண்ணம் சமாதிநிலை கூடினார்கள். இவர் துறவுநிலை நான்கனுள் " பகூதன் " என்னும் சந்நியாசம் கொண்டவர் ''யாதுமூரே யாவருங் கேளிர்'' என்று வாழ்ந்தவர்.

தினமும் ஏழு கிராமங்களைப் பாதங்களால் நடந்து புனிதமாக்கினார். நயினாதீவு முத்துக்குமார சுவாமிகள், 'இவன் பின்னுக்கு நல்லாய் இருப்பான்' என்று கந்தையா சுவாமிகளுக்கு அருளாசி கொடுத்தபடி புகழ்பூத்து நின்றார். காயஉபாலியைக் கடந்து விறகின் மேலும், வைக்கோலிலும், ஏச்சம்பற்றை மறைவிலும், மண்ணின் மேலும் நித்திரை செய்வார். விபூதி, உருத்திராக்கம், இயம நியமங்கள், நேமநிட்டைகளென்ற சங்கற்பமெதுவுமே இல்லாத மகான்தான் சுவாமிகள். பேச்சினாலும், ஏச்சினாலும், குடையடியாலும், திருவடி தீட்சையாலும், அருள் நோக்கினாலும் அடியார்க்கு வாழ்வளித்தார்.

கோண்டாவில் குமரகோட்டம், சுவாமிகளின் பிறப்பிடம். தந்தையார் நாகேந்திரர். தாயார் ஆச்சிப்பிள்ளை. பயிர்த் தொழிலை உயிர்த் தொழிலாகக் கொண்டவர். வேதாந்த மடம் மகாதேவ சுவாமிகளிடம் முறையாகக் கற்றவர். திருவாதவூரடிகள் புராணத்துக்கு உரை சொல்வதில் வல்லவருங்கூட. வடிவேல் சுவாமிகள் இவருடைய உடன் மாணாக்கர் ஆவர். முப்பதாம் வயதளவில் இல்லறத்திற் புகுந்து, சில ஆண்டில் இல்லாள் உயிர் நீத்ததும் முற்றத் துறந்த முனிவரானார். நாட்டிலே இறைவனைக் காணாமல் கூட்டிலே குருவைக் கண்டார். ஐந்து வருடங்களுக்கு முன்னர் ஓர் அன்பர், சுவாமிகள் சமாதி கூடவும், கோண்டாவில் அற்புத நர்த்தன விநாயகர் ஆலயத்துக் கருகில் சமாதி வைக்கவும் கனவு கண்டது போல, 16-2-78-இல் சமாதி வைக்கப் பட்டது. சுவாமிகளின் சமாதிக் கோயில் பூர்த்தியாகி 14-3-78-இல் முதலாவது குரு பூசையும் நடைபெற்றது. மிருகசீரிடம் சுவாமிகளின் ஜனன நட்சத்திரமாகும். செல்வச் சந்நிதி, நல்லூர், கதிர்காமம், வல்லிபுரக் கோவில் முதலிய க்ஷேத்திரங்களிலெல்லாம் சித்தர்களின் சமாதிகளுண்டென்றும், அதனாலேயே அவை சீர்த்தி மிக்க தலங்களாய் மிளிர்கின்றன என்னும் நம்பிக்கை நம் நாட்டில் பரவலாக இருப்பதை எல்லோருமறிவர். அவ்வாறே சுவாமிகளின் சமாதி கோண்டாவில் நர்த்தன விநாயகர் ஆலயத்தில் அமைக்கப்பட்டது.

பங்கயப் பூம்புனல் குடைந்தாடும் மகளிர் போல, சுவாமிகளும் உள்ளக் குளத்திலே குடைந்தாடி, இறைவனை அகமுகமாகக் கண்டார் என்பதற்குக் குடையொரு சின்னமாகும். சிவப் பொலிவு ததும்பி வழியும் களை கட்டிய முகபாவம்; ஒளிதுலங்கும் திருமேனி; ஓடும் செம்பொன்னும் ஒக்க நோக்கும் பான்மை; கூடுமன்பினில் கும்பிடும் கொள்கை; ஞான ஒளி வீசும் நயனங்கள்; இகழுக்கும் புகழுக்கும் கட்டுப்படாத போக்கு; ஆயிரம் பிறை கண்ட அத்துவித தத்துவஞானி; செத்தாரைப்போலே திரிந்த சீவன் முத்தர்; கருவி கரணங்களின் சேட்டையின்றி, இந்திரிய வயம் மயங்கித் திரியாமல் திருவருள் ஒன்றினால் மட்டும் வழி நடத்தப்பட்டு, தனது திருப்பாதங்களால் தேசமெல்லாம் நடந்து நாட்டைப் புனிதமாக்கி, பொங்கியெழும் அன்பு வழியில் எல்லார் உள்ளங்களிலும் அருளொளியைப் பரப்பி நிலைத்து நிற்பவர். காட்சிக்கு எளியவர் - கருணைக்குப் பெரியவர் - பார்ப்போர் பைத்தியகாரனென்று சொல்லும்படிக்கு இறைவன் பித்தேறித் திரிந்தார். அகப்பற்றையும், புறப்பற்றையும் அறவே ஒழித்து, புறநோக்கற்று, அகநோக்குடன் வாழ்ந்தார்; இறைவனுடைய எழிலார் வடிவை, தன் திருவுள்ளத்தில் அழகொழுக எழுதிப் பார்த்து ஆனந்த வெள்ளத்திற் திளைத்து; இடையறு இறையன்புடனும்; குறைவிலா நிறைவுடனும் வாழ்ந்தவர்தான் குடைச்சுவாமிகள்.

ஐம்புல ஒடுக்கமும், சுவைகளை வென்ற சுருதியும் இவருக்குக் கைவந்த நிலையில் காய மாயமற்று, தாமரை இலைமேற்றண்ணீர் போற் பிரிந்திருந்தார். எந்நேரமுந் தன்னை 'ஏழையடியவன்' என்றே சொல்லிக் கொள்வார். சுமார் நாற்பது ஆண்டுகட்கு மேலாகத் தன்னையோர் சிவ சொரூபியாக்கி தெய்வ நிலையில் நடமாடினார். ''பொய்த் தன்மைத் தாய போர்வையை மெய்யென் றெண்ணும் வித்தகத்தாய வாழ்வு வேண்டேன்'' என்னும் சுந்தரர் வாக்குக்கு இலக்கியமானவர்.



குடைச்சாமி
எனப்
பக்தி சிரத்தையுடன்
அழைக்கப்படும்
கோண்டாவில்
குமரகோட்டம்
கந்தையாச் சுவாமிகள்.

கந்தையாச் சுவாமிகளின்
சமாதிக் கோயில்.

சுவாமிகள். இத்த விகாரந் தெளிந்த பளிங்கு மாமண்டபத்தில், இறைவனைக் கண்டு தெளிந்த அநுபூதி நிலையை அன்பர்களுக் கெல்லாம் வாரி வழங்கிக் கொண்டிருப்பார். முடிவிலாத சிவபோகம் விளைந்து முறுகிய நிலையில் சமாதி அடைந்தார்கள். மூன்று தினங்களாய் சுவாமிகளின் சடலம் பொன் னொளிவிட்டுப் பிரகாசித்தது.

திருவாசகத்தையே தனது மூச்சாகவும், பேச்சாகவும் கொண்டவர் தவத்திரு சபாரத் தினம் அடிகளார். இவர்களைத் திருவாசகச் சாமியென்றே பிரபந்தங்கள் போற்றுகின் றன. அவர்களே குடைச் சுவாமிகளின் வரலா ரென்றை எழுதவேண்டுமெனத் தமியேனுக் குப் பணிப்புரை வழங்கினர்களென்றல் - திருவாசகச் சுவாமிகளுக்குக் குடைச் சுவாமி கள் மீதிருந்த ஆராத அன்புதான் என்னே! மதிப்புத்தான் என்னே! பெரிய நகுலேஸ்வ ரர் என்றழைக்கப்படும் பெரியாருடன் கோண்டாவிற் சுவாமிகள் மிக்க ஈடுபாடுடை யவர்; அவர்களைப் பல இடங்களிற் கௌர வித்துள்ளார். சோதி ஸ்வாமிகள் சிறந்த சிவபக்தர். அவர்களையே வீழ்ந்து வணங்கி அடியார் பெருமையை அயலவர்களுக்கு அறியச் செய்தவரும் கோண்டாவிற் சுவாமி களே.

உடுப்பிட்டியிலே சிதம்பரப்பிள்ளை யென் ருேர் சித்தம் தெளிந்த ஞானி இருக்கிருர். கந்தையா சுவாமிகளுக்கும், அவருக்கும் போக்கிலே வித்தியாசமே இல்லை. குரு நமச்சி வாயரும், குக நமச்சிவாயரும் ஒருவரையொ ருவர் மதிப்பது போல, சிதம்பரப்பிள்ளையைக் கந்தையாவும், கந்தையாவைச் சிதம்பரப் பிள்ளையும் மதிப்பது வழக்கம். இவ்வாறு பல சாதுக்களாலும், ஞானிகளாலும் போற்றப் பட்டவர் சுவாமிகள்.

சுவாமிகளின் அற்புதமான நடமாட்டங் கள் பலப்பல. எனினும் அடியார்கள் வாயி லாக அறிந்த சிலவற்றைக் குறிப்பிடுவது சாலப் பொருத்தமாகும்.

* யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்துக்கு அருகாமையில் ஓர் படப்பிடிப்பாளர். அவர் பெயர் இராஜரத்தினம். சுவாமிகளிலே அள விறந்த பக்தியுள்ளவர். சுவாமிகளின் முழுத் தோற்றத்தை ஓவியமாகத் தீட்டுவித்துத் தனது ஸ்தாபனத்தில் வைத்திருந்தார். அப் படம், சுவாமிகளின் வடிவத்தைத் தத்ரூப மாகக் காட்டுகிறதா என்பதை அறிவதற் காக 40 ஆண்டுகட்கு மேலாகச் சுவாமிகளில் ஈடுபாடுடைய, கந்தர்மடம் வீரசிங்கம் என் பவரை அழைத்து வந்து படத்தைக் காட்டி ஞர். எல்லாம் மிகப் பொருத்தம். ஆனல் உடைதான் காவி நிறமாய் அமைந்திருக்கி றது. சுவாமிகள் வெண்மையான ஆடைதான் அணிவார், என்று சொல்லி மனத்துயருடன் சென்றுவிட்டார். அடுத்த நாட் காலை சுவாமி கள் வீரசிங்கமவர்களின் வீட்டுக்குக் காவி படிந்த வேட்டியுடனும் சால்வையுடனும் சென்ருர். இஃது அற்புதமோ அதிசயமோ என்று மெய்மறந்தார் அன்பர் வீரசிங்கம் அவர்கள்.

* ஐந்தாறு வருடங்களுக்கு முன்னர் சுவாமிகள் நீண்ட நாள் தொடர்புடைய அன்பர் ஒருவருடைய வீட்டிற்குச் சென்றிருந் தார். அன்பர் சுவாமிகளை வரவேற்று உப சரணை செய்தபின் அவசர வேலையாகச் சாவ கச்சேரி செல்வதாயும், நின்று உணவருந்திச் செல்லும்படியும் வேண்டினர். சுவாமிகள் சம்மதித்தபின் சயிக்கிளிற் சாவகச்சேரி சென்ருர். நாவற்குழியிலே உப்புக் கடலின் மேல் அமைந்திருக்கும் பாலத்திலவர் சயிக் கிளிற் செல்லும்போது சுவாமிகள் கடலிலே முழங்காலளவு தண்ணீரில் நின்று கால் கழுவிக் கொண்டிருந்தார். அன்பர் சயிக் கிளை விட்டிறங்கி 'சுவாமிகளும் வந்துவிட் டீர்களா?' என்று கேட்டார். 'ஓம் நாங்க ளும் உங்களுடன் வந்துவிட்டோம்' என்று கூறினர்கள் குருதேவர். அன்பர் சுவாமிகளி டம் விடை பெற்றுக் கொண்டு சென்ருர். காரியமும் வெற்றி.

* மறுவன்புலோவில் சின்னத்தம்பிச் சுவாமிகளின் சமாதியில் இரு பெண்கள் இருந்தார்கள். ஒரு அம்மா வெளியிலே செல்லும்போது கஞ்சியை வடித்துக் கன்றுக் குட்டிக்கு வையென்று சொல்லிச் சென்ருர். அவர் சொன்னபடி கஞ்சியை வடித்து முடியும் நேரம், சுவாமிகளும் அங்கு சென்ருர். சுவாமிகளுக்குக் கொடுப்பதற்காக அந்த அம்மா கஞ்சியைக் கொண்டு வந்தார். பசுக்கன்றுக் குரிய கஞ்சி எனக்கு வேண்டாம். கன்றுக்கே வையுங்களென்று மறுத்துச் சென்றுவிட்டார்.

* கமக்காரர் ஒருவர் பெரிய குடும்பஸ்தர். அவருடைய தோட்டத்துக்கு அதிகாலையிற் சென்று மத்தியானம் வரை நடந்து திரிந்தார் சுவாமிகள். அடுத்து மூன்ருண்டுகளாக வெங்காய விளைச்சல் எல்லையில்லை.

* சுவாமிகளிடம் திருவடிதீட்சை பெற வேண்டுமென்று ஒருவருக்கு நீண்டநாள் விருப்பம். அவரைத் தேடிச் சென்று "எம்பெருமான் சொல்லுகிருர் உங்களுக்குத் திருவடி தீட்சை செய்யும்படி" என்று கூறி திருவடி தீட்சை செய்தார். இன்னெரன்பருக்குக் கனவிலேயே திருவடிதீட்சை அளித்தார்.

* அன்பர் இராசரத்தினம் சுவாமிகளுக்கோர் குடை அன்பளிப்புச் செய்ய வேண்டுமென்ற காதலோடு நீண்ட நாட்களாக ஓர் புதுக் குடை வாங்கி வைத்திருந்தார். மகா சமாதியாவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னராக அன்பர்களோடு மோட்டாரில் அவருடைய வீட்டுக்கு வந்து குடையையும் எடுத்துக் கொண்டுவா என்று சொன்ஞர். சொக்கிப் போன இராசரத்தினம் புதிய குடையுடன் காரில் ஏறினர். அன்று பூராவும் பல இடங்கட்கும் கூட்டிச் சென்று மாலையிலன்னரின் இல்லத்திலவரை விடும்போது தனது கையிலிருந்த பழைய குடையைக் கொடுத்து விட்டுப் புதிய குடையைப் பெற்று அருளாசியும் வழங்கினர்கள்.

இவ்வாறு அற்புதம் நிறைந்த சுவாமிகள்ஒருமுறை திருக்கேதீஸ்வரப் பெருமானைத் தரிசிக்கப் போகும் வழியிலேதான் - எம்பிரான் அவரிடம் வந்து தோற்றமளித்த தாயும், அன்றிலிருந்துதான் பக்தியும் - ஞானமும் - துறவும் தனக்கு உதயமான தென்றும் சுவாமிகள் கூறிய திருவாக்கு எவ்வளவு புனிதமானது என்பதை நினைக்கும்போது புல்லரிக்கின்றது. திருவாசகத்தையே படியுங்கள் - அதுவே வாழ்வுக்கு உறுதுணையென்ருர். நாமும் அவர்களின் அடிச்சுவட்டில் நடந்து உய்வோமாக.

"அப்பா இம்முத்திக்கு அழியாத காரணந்தான்
செப்பாய் அருளாலே; செப்பக்கேள் - ஒப்பில்
குருலிங்க வேடமெனக் கூறிலிவை கொண்டார்
கருவொன்றி நில்லார்கள் காண்"

"கற்றுமனம் போல் கசிந்து கசிந்தேயுருகி
உற்ருசான் லிங்கம் உயர்வேடம் - பற்றுக
முத்தித் தலைவர் முழுமலத்தை மோசிக்கும்
பத்திதனில் நின்றிடுவார் பார்"

— உண்மை விளக்கம்

குருநாதன் திருவடிகளே சரணம்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சிவமயம்

# உளங்கனிந்த நன்றி

கோண்டாவில் அற்புத நர்த்தன விநாயகர் ஆலயம் அருட் பொலிவுடன் அமைவதற்குரிய திருப்பணி வேலைகள் (ஆரம்ப காலந் தொட்டு) சிறப்புடன் திகழப் பொன்னும் பொருளும் மனமுவந்து வழங்கிய அன்பர்கள் அனைவருக்கும்,

கோயில் மடைப்பள்ளி அமைக்கக் காணி வழங்கியவரும், இன்னும் வழங்கக் காத்திருப்பவரும், ஆரம்பகால மடம் கட்டுவித்த, கந்தர் – கணபதியாரின் பீட்டனுமாகிய கந்தையா கனகரத்தினம் அவர்களுக்கும்,

கோயிலை அழகொழுக அமைத்த சிற்பாசாரியர்களுக்கும்,

"என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்டு கோயில் வேலைகள் அனைத்திலும் இரவு பகலாகத் திருத்தொண்டாற்றிய அடியார்களுக்கும்,

கும்பாபிஷேக மலர் சிறப்புடன் அமைவதற்கு வேண்டிய ஆசியுரைகள், கட்டுரைகள், கவிதைகள் என்பவற்றை எழுதி உதவிய அறிஞர்கள் அனைவருக்கும், ஏற்ற படங்களைச் செய்து உதவிய ஓவியர்களுக்கும்,

கும்பாபிஷேகக் கிரியைகளை விதிப்படி பக்தி பரவசத்தோடு ஆற்றிய பிரதிஷ்டாகுரு, சிவாகம வித்தியா பூஷணம் சிவஸ்ரீ. ச. பா. வைத்தியநாதக்குருக்கள் ஐயா (ஊரெழு) அவர்களுக்கும், அவரோடு சேர்ந்து கிரியைகள் புரிந்த குருமார்களுக்கும்,

கும்பாபிஷேக மலரை அழகாக அச்சிட்டு உதவிய யாழ்ப்பாணம் விவேகானந்தா அச்சகத்தாருக்கும்

எமது உளங்கனிந்த நன்றி.

ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் கோயில்,
கோண்டாவில்.
13-07-81

தொண்டர்கள்

உ

சிவமயம்

# கோண்டாவில்
# ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் ஆலய
# மஹா கும்பாபிஷேக
# மலர் வெளியீட்டுக் குழு

திரு. ப. சிவசுப்பிரமணியம் அவர்கள்

,, அ. பஞ்சாட்சரம் ,,

,, வே. பரமநாதன் ,,

,, க: சோதிலிங்கம் ,,

,, மு. பாலசுப்பிரமணியம் ,,

,, க. வே. சரவணமுத்து ,,

விவேகானந்த அச்சகம் லிமிட்டட்
யாழ்ப்பாணம்